மலர் 2 இதழ் 10

**சாதி**
**ஒழிப்போம் !**
**தமிழரை**
**இணைப்போம் !**
**தமிழ்ச் தேச**
**இறையாண்மை**
**மீட்போம்**

ஆசிரியர்
**திருமொழி**

ஆசிரியர் குழு
**பாரி**
**ரூபன்**
**முத்துமுருகன்**
**செந்தில்**

சட்ட ஆலோசனை
**வழக்கறிஞர் இரா. வைத்தீஸ்வரன்**

தொடர்பு முகவரி
243/1, பெரியார் நகர்,
காட்டுநாவல்,
கந்தர்வகோட்டை அஞ்சல்
புதுக்கோட்டை மாவட்டம்
அ.கு. எண். 613 301

தொடர்பு எண்கள் :
**76674 43935**
**99431 14128**

தனிச்சுற்றுக்கு மட்டும் நன்கொடை ரூ. 20/-

# முதலாளியத் தேர்தல்ப் பாதையை வீழ்த்து வோம் ! மக்கள் அரசு தேர்தல்ப் பாதையை - கம்யூன் பாதையை நோக்கி முன்னேறுவோம் !

திருமொழி



மக்கள் அரசுப் பாதை என்ற சொல்லாடல் கம்யூன் என்ற சொல்லாடலை அடிப்படையாகக் கொண்டதாகும். வரலாற்றில் முதன்முதலாக பாரிஸ் நகரில் தொழிலாளி வர்க்கம் தனது அரசு அதிகாரத்தை - கம்யூன் அமைப்பை நிறுவியது. 1871 ஆம் ஆண்டில் 72 நாட்களே கம்யூன் அரசு இயங்கியது. 1871 ஆம் ஆண்டிலேயே முதலாளியம் பாட்டாளி வர்க்கத்தின் அரசை வீழ்த்தி தன்னை மீண்டும் பாதுகாத்துக் கொண்டது. இந்த வரலாறு சொல்லும் உண்மை கம்யூன் ஆட்சி முறை என்பதே உழைக்கும் மக்களின் - தொழிலாளி வர்க்கத்தின் முதல் ஆட்சி முறை. இந்த ஆட்சி முறையை பாரீஸ் கம்யூன் நிறுவியது. இந்த வரலாற்று உண்மையை 1917 ஆண்டில் சோவியத் வடிவத்தில் மாருஷ்ய பாட்டாளி வர்க்கம் பல்தேசிய இனங்களின் சோவியத் ஒன்றிய அரசை நிறுவியது. அடுத்து சீனாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் 1948 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக சீனாவில் கம்யூன்களை நிறுவியது. 1945 -இல் வியட்நாமில் அந்த நாட்டின் மொழி தேசிய வடிவில் கம்யூன் அரசு அமைக்கப்பட்டது. பின்னர், குறிப்பாக 1945 க்குப் பிறகு பல நாடுகளிலும் கம்யூனிஸ்ட்டுகளின் - கம்யூன் அரசுகள் அமைக்கப்பட்டன.

## முதலாளியத் தேர்தல்ப் பாதைக்கும் கம்யூன் அரசுப் பாதைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு என்ன?

முதலாளியத் தேர்தல்ப் பாதை மக்களுக்கு அரசு அதிகாரத்தை வழங்குவதில்லை. மாறாக முதலாளிகளின் எந்த கட்சி அரசு அதிகாரத்தை கைப்பற்றுவது என்பதை தீர்மானிக்கவே இந்த முதலாளியத் தேர்தல் பாதை பயன்படுகிறது. ராணுவம், நீதிமன்றம், கலெக்டர் முதல் அனைத்து

நிர்வாக அமைப்புகளும் (STATE) தனித்தே இயங்கும். முதலாளியத் தேர்தல்ப் பாதையில் தேர்வு செய்யப்பட்ட வேட்பாளர்களுக்கு சட்டமன்ற – பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசு நிறுவனங்களில் செயல்படும் அதிகாரம் இல்லை. மக்கள் அரசு அதிகார அமைப்பான கம்யூன் முதலாளிய தேர்தல் அரசுக் கொள்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. நீதிமன்றத் தலைவர்கள் அதிகாரிகள், இராணுவ மற்றும் காவல் துறை அதிகாரிகளும் கம்யூன்களில் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த ஒரு அரசு நிறுவனங்களிலும் செயல்தன்மை கொண்டவர்களாக இல்லை. அதே சமயம் முதலாளிகள் எல்லா நிறுவனங்களிலும் தனது பண அதிகாரத்தால் ராணுவம் மற்றும் நீதிமன்றம் உட்பட அனைத்து நிறுவனங்களிலும் அதிகாரம் செலுத்த முடியும்.

பண பலத்தால் மட்டும் அல்ல, பாலியல் உறவுகளை ஊக்குவித்தும், இலஞ்ச ஊழல்களை பயன்படுத்தியும் முதலாளியம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும். நேர்மையான அதிகாரிகளை, பணி நீக்கம் செய்தும், சிறைபடுத்தியும், கொன்றொளித்தும் முதலாளியம் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும். தனது நிலைக்கு எதிராக மக்கள் அணியமாகும் நேரத்தில் முதலாளியம் தேர்தல்ப் பாதையைக்கூட நீக்கிவிடும். இந்த நிகழ்வு 1975-ல் இந்திரா காந்தியால் நடைமுறைப்படுத்தப்பட்டது. சிலி நாட்டிலும் 17 ஆண்டுகள் தேர்தல்ப் பாதை கைவிடப்பட்டது. பங்களா தேசத்திலும், பாகிஸ்தானிலும் பல முறை ராணுவ ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதை அறிவோம்.

இதன் காரணங்களால்தான் பாட்டாளி வர்க்கம் – கம்யூனிஸ்ட் இயக்கம் இந்த முதலாளியத் தேர்தல்ப் பாதையை முற்றாக நிராகரிக்கின்றனர். இந்த முதலாளியத் தேர்தல்ப் பாதை உழைக்கும் மக்களுக்கு எதிரானது என்பதற்கு உலக வரலாற்றில் எண்ணற்ற சான்றுகள் இருக்கின்றன.

சிலி நாட்டில் 1970-ஆம் ஆண்டில் சோசலிச கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இன்னும் சில மார்க்சிய கொள்கையை ஏற்ற கட்சிகளும் முதலாளியத் தேர்தல்ப் பாதையில் ஆட்சியைக் கைப்பற்றின. மூன்று ஆண்டுகள் ஆட்சியும் நீடித்தது. முதலாளியம் தனது நிலையை உயர்த்த நிலவுடமை போக்குகளில் சில முன்னேறிய வழிமுறைகளை உருவாக்க வேண்டியுள்ளது. தனி நபர்களின் கைகளில் செல்வாக்கில் இருந்த வட்டி முறைகளையும், வங்கிகளையும் சீர்படுத்த வேண்டியிருந்தது. வங்கிகளை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதும், நிலச் சீர்திருத்தத்தை உருவாக்குவதும் முதலாளிய அரசின் தேவையாக இருந்தது. சிலி நாட்டில் மட்டுமல்ல இந்தியா மற்றும் பல நாடுகளிலும், இந்த மாற்றம் முதன்மையான தேவையாக முதலாளியத்திற்கு இருந்தது. நிலத்திற்கு தனி உடமை 15 ஏக்கர் அளவுக்குள் இருக்க வேண்டும் என்ற சட்டம் இந்தியாவில் கொண்டு வரப்பட்டது. அரசுக்கட்டுப்பாட்டில் வங்கிகளை நிறுவுவதும் 1970 களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. சிலி நாட்டிலும் இம்முறைகள் கம்யூனிச கொள்கைளை ஏற்றுக் கொண்ட சோசலிச கட்சிகளால் நடைமுறைப் படுத்தப்பட்டது. அரை நில உடமை கொண்ட நாடுகளில் இந்த முதலாளிய முறை அமல்படுத்தப்பட்டது. இந்தப் பணிகள் முதலாளிய வளர்ச்சிக்கு அடிப்படைத்தேவைகளாக இருந்தன. அரசின் தலைமையில் பல பொது நிறுவனங்களை கொண்டு வருவது முதலாளியத்தின் அவசியத் தேவையாக இருந்தது. சிலியில் பெருமளவில் இருந்த செம்பு ஆலைகள் அமெரிக்க முதலாளிகளிடமே இருந்தன. சிலியில் அதிகாரத்தில் இருந்த சோசலிச – கம்யூனிச அரசு. அமெரிக்காவின் செம்பு ஆலைகளை அரசு உடமையாக்கியது. முதலாளியம் – குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்திய முதலாளியம் 1973 ஆம் ஆண்டில் சிலியின் ராணுவத்தின் மூலம் சிலி நாட்டை கைப்பற்றியது. இராணுவம் கம்யூனிஸ்ட் தலைவர்களையும், சோசலிசத் தலைவர்களையும் படுகொலை செய்தது. பல்லாயிரக்கணக்கான மக்களையும், ஜனநாயக இயக்கங்களை சார்ந்தவர்களையும் சிறையில் அடைத்தது மட்டுமின்றி படுகொலைகளும் செய்தது. ஏறத்தாழ 1970 முதல் 1990 வரை – 17 ஆண்டுகள் ராணுவ ஆட்சியே சிலியில் நடைபெற்றது.

சல்வா டோ அலெண்டே மார்க்சியவாதியாக இருந்தாலும் சோசலிஸ்ட் பார்ட்டி ஆப் சிலி என்ற அமைப்பிலேயே இருந்தார். சிலியின் ஜனாதிபதியாகவும் இருந்தார். அமெரிக்காவின் கையாளாக மாறிய இராணுவத் தலைவர் இராணுவத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார். 17 ஆண்டுகள் ராணுவ ஆட்சியே நடந்தது. பிறகு

மீண்டும் முதலாளியத் தேர்தல்ப் பாதை இன்று வரை பின்பற்றப்படுகிறது.

CPI, CPIM, CPIML இயக்கங்கள் சிலி நாட்டின் வரலாற்றை தெளிவாக அறிவார்கள். CPI, CPIM கட்சிகள் முதலாளியத் தேர்தல்ப் பாதையில் வீழ்ந்து விட்டன. அதுவே அதன் நடைமுறை அரசியல் கொள்கையாக மாறிவிட்டது. தெலுங்கானா புரட்சிப் போரை இந்திய அரசு வீழ்த்திய பின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முதலாளிய தேர்தல்ப் பாதையையே ஏற்று சிலி நாட்டுக்கே வழிகாட்டிவிட்டது. இந்தியாவில் குறிப்பாக கேரளாவில் முதலாளியத் தேர்தல்ப் பாதை மூலம் (நம்பூதிரி மூலம்) முதலாவது சட்டமன்ற ஆட்சியை 1953ல் கைப்பற்றி தேர்தல்ப் பாதையே தனது அடிப்படைக் கொள்கை என முடிவு செய்து விட்டது. CPIM அதே வழியில் மேற்குவங்கத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி நடத்தியது. திரிபுராவையும் 15 ஆண்டுகள் ஆட்சி செய்தது. CPIM தலைமையில் இன்று வரை பல ஆண்டுகள் கேரளாவில் ஆட்சி செய்து வருகிறது. முதலாளியத் தேர்தல்ப் பாதையையே தனது கொள்ளை என CPI, CPIM கட்சிகள் தங்களது நடைமுறை மூலம் நிரூபித்து விட்டன.

CPIML நூற்றுக்கணக்கான குழுக்களாக சிதறுண்டு போய் விட்டன. பெரும்பாலான குழுக்கள் தேர்தல்ப் பாதையை நோக்கிச் சென்று விட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மாலெ குழுக்களில் சில தேசிய இனப் பாதையில் பயணிக்கின்றன. சில குழுக்கள் முதலாளியத் தேர்தல்ப் பாதைக்குள் வீழத்தயாராகி வருகின்றன. மிகச்சில குழுக்கள் முதலாளிய தேர்தல்ப் பாதையை நிராகிக்கின்றன. மக்கள் அதிகாரப்பாதையை, கம்யூன் வழியை, சோவியத் வழியை பரப்புரை செய்து வருகின்றன.

மாவோயிஸ்ட் கட்சியினர் முதலாளியத் தேர்தல்ப் பாதையை முற்றாக நிராகிக்கின்றனர். அதே சமயம் தங்கள் அதிகாரத்தை நிறுவிய பகுதிகளில் கம்யூன் வழியில் மக்கள் ராணுவத்தையும், ஆட்சிமுறைகளையும் நிறுவி வழிநடத்தினார்கள். ஆயினும் தேசிய இன விடுதலைப் பார்வை இன்மையும், முதலாளியத் தேர்தல் பாதையைப் பயன்படுத்தி மக்களை தேர்தல்ப் பாதைக்கு எதிராக பயன்படுத்தும் வேலை முறை அவர்களிடம் இல்லை. இந்தியக் கண்ணோட்த்திலிருந்து அவர்கள் முழுமையாக விடுபடவில்லை. இந்தியத் தேசியக் கண்ணோட்டம் புரட்சியை முன்னேடுக்க பெரும் தடையாக இருந்தது.

### முதலாளியத் தேர்தல்ப் பாதையை நாம் முற்றாகப் புறக்கணிக்கிறோமா?

அடிப்படையில் முற்றாகத் தேர்தல்ப் பாதையை ஒழித்துக் கட்டி மக்கள் அரசு அதிகாரத்தை – கம்யூன்களை நிறுவுவதே முதன்மை இலக்காகும். மிகத்திரளான உழைக்கும் மக்கள் இந்த முதலாளியத் தேர்தல்ப் பாதையை நம்பி வீழ்ந்து கிடக்கின்றனர். மக்களை தேர்தல்ப் பாதையிலிருந்து மீட்டெடுக்க நாம் இந்தப்பாதையில் பயணிப்பது மிக மிக அவசியமானதுதான். இந்த தேர்தல்ப் பாதையை பயன்படுத்துவதற்கு அடிப்படையான காரணங்கள்.

1. இது மக்களுக்கு அதிகாரம் வழங்கவில்லை. என்பதை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.
2. முதலாளியத் தேர்தல் அரசியல் நிலவுடமை சக்திகளுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும், முதலாளிய கர்ப்பரேட் நிறுவனங்களுக்கும் சேவை செய்யும் நோக்கம் கொண்டது. முதன்மையாக இதை கொண்டு செல்ல வேண்டும்.
3. உழைக்கும் மக்களின், தேசிய இன மக்களை தேசிய இன வழியல் ஒன்றுதிரட்டி முன்னேறச் செய்யவும் இந்தத் முதலாளியத் தேர்தல்ப் பாதையை நாம் பயன்படுத்த வேண்டும்.

இந்திய வரலாற்றில் விடுதலைக்காக போராடிய பல தேசிய இனங்கள் இந்தத் தேர்தல்ப் பாதையை பயன்படுத்தி இருக்கின்றன. காஷ்மீர், பஞ்சாப், வட கிழக்கு மாநிலங்கள், நேபாள், ஈழம், இலங்கை, என எண்ணற்ற போராட்டங்கள் முதலாளியத் தேர்தல்ப் பாதையை பயன்படுத்தியது நமக்கு பல செய்திகளை கற்றுத் தருகின்றன.

அ. 1976 ‘வட்டுக்கோட்டை தீர்மானம் தமிழீழப்போருக்கு வெகுமக்களின் ஆதரவை திரட்டி பாதை அமைத்தது. 1977 –ல் இலங்கையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஈழத்தில் 18 தொகுதிகளில் 17 இடங்களில் TULF வெற்றி பெற்றது. புலிகள் உட்பட பல இயக்கங்கள் விடுதலைப் போரை முன் எடுக்க உதவின.

ஆ. பஞ்சாபில் 2024 ல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் சிறையிலிருந்து போட்டியிட்டு இரண்டு இலட்சத்திற்கும் கூடுதலாக வாக்குகளை பெற்று வெற்றி பெற்றவர்

அமீர்த் பால் சிங், இந்திரா காந்தியை சுட்டு கொன்றவரின் மகன் சுயேச்சையாக போட்டியிட்டு 2,98,062 வாக்குகள் பெற்று வெற்றி அடைந்தார். அவரது தந்தை பெயர் பியாத் சிங், இந்திராகாத்தி கொல்லப்பட்ட அதே நிமிடத்தில் இவரும் இந்திரா பாதுகாப்பு காவலர்களால் சுட்டுக் கொல்லபடுகிறார். ஆனால் பாராளுமன்ற தேர்தலில் பியாத் சிங்கின் மகன் சராப்ஜித் சிங் வெற்றி பெறுகிறார்.

இ. காஷ்மீர் விடுதலை போராட்ட வரலாற்றில் 2024ல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் எஞ்சினியர் ரஷித் சிறையிலிருந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். இன்று முதல்வராக இருக்கும் ஓமார் அப்துல்லாவை வீழ்த்தி பாராளுமன்றத் தேர்தலில் 2,04,142 வாக்குகள் வித்தியாசத்தில் எஞ்சினியர் ரஷீத் வெற்றி பெற்றார். இவர் UAPA சட்டத்தில் சிறைபடுத்தப்பட்டவர். 4,72,481 வாக்குகள் பெற்றார்.

ஈ. நேபாளில் மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்டியதில் முதன்மையான கட்சியாக இருந்தது நேப்பாள் மாவோயிஸ்ட் கட்சியே. நேபாளத்தில் தேர்தல் பாதையில் பங்கேற்கும் கம்யூனிஸ்ட்டுகளுடன் இணைந்தே நேபாளத்தில் ஆட்சியை கைப்பற்றினார்கள். நேபாள் மாவோஸ்ட்டுகள். தனது படைகளில் இருந்த பல பேரை ராணுவத்தில் சேர்த்தார்கள். பிரஜண்டா இன்றும் கட்சியின் தலைமையிலும், நாட்டின் பிரதமராகவும் இருக்கிறார்.

நாம் மேலே கூறிய இந்த உதாரணங்கள் தேர்தல்ப் பாதையை தேர்வு செய்வதற்காக அல்ல. கட்சியின் வழிகாட்டுதலை, கட்சியின் நடைமுறையை, முதலாளியத் தேர்தல்ப் பாதை மக்கள் பாதை அல்ல. கம்யூன் பாதையே உழைக்கும் மக்கள் பாதை என்ற கருத்தை நமது தேசத்திற்கு மட்டும் அல்ல, இந்தியா முழுவதும், உலகம் முழுவதும் உள்ள தேசிய இனங்களுக்கும், அனைத்து நாடுகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே நமது நோக்கம். உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் தன் நாட்டில் மட்டும் அல்ல உலக அளவில் நமது கொள்கைகளை கொண்டு செல்ல வேண்டும், அனைத்து தேசிய இன உழைக்கும் மக்களுடன் நட்பைப் பேணி வாழ்வதும், போராட்டங்களுக்கு துணை நிற்பதும் நமது அடிப்படைக் கொள்கையாக இருக்க வேண்டும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மா.லெ இயக்கத்தில் 30க்கும் மேற்பட்ட சிறு குழுக்கள் இயங்குகின்றன. இந்த குழுக்களில் ஊழியராகச் செயல்படுபவர்கள் மொத்தம் 1000 பேருக்கும் குறைவாகவே இருப்பார்கள், என்பது 30 குழுத் தோழர்களுக்கும் தெரியும். இந்த அவல நிலையில் இருந்து கொண்டு ஏன் முதலாளியத் தேர்தல்ப் பாதையில் தீவிரம் காட்டுகின்றனர் என்பதே தோழர்களிடம் நாம் எழுப்பும் கேள்வி? நாம் ஒன்றுபடுவதற்கான வழிமுறையை நோக்கிப் பயணம் செய்வோம்.

முதலாளியம் எப்போதும் எல்லா நேரமும் தனது முன்னேற்றத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்கும், செயல்படும். அதன் சிந்தனையில் எப்போதும் தனது நண்பர்களான நில உடைமையாளர்களுடன், ஏகாதிபத்திய சக்திகளுடன் எவ்வாறு உறவு கொள்வது என்பதே அதன் நோக்கமாக இருக்கும். அதைவிட உழைக்கும் மக்களை எப்படி பிரித்தாழ்வது என்பது அதன் இடைவிடாத செயலாக இருக்கும். குறிப்பாக சாதி, மத, இன சக்திகளை பிளவு படுத்துவதும், தேவை எனில் அவர்களை மோத வைப்பதும் முதலாளியத்தின் செயலாகும். அதற்கு முதலாளியத் தேர்தல் முறை அவர்களுக்கு பேருதவி செய்யும். முதலாளியம் இடைவிடாது அதன் முன்னேற்றத்தைப் பற்றியே சிந்திக்கும். பாட்டாளிவர்க்கமாகிய நாம் முதலாளியத்தைப் எப்படி ஒழிப்பது என்றே சிந்திப்போம். புரட்சிப் பாதையில் முன்னேறுவோம். ஒன்றாய் இணைவோம்.


- முதலாளியத்தேர்தல்ப் பாதையை விரட்டி அடிப்போம்.
- மக்கள் அரசு அதிகாரம் அளிக்கும், கம்யூன் பாதையை முன்னெடுப்போம்.
- தமிழ்த்தேச இறையாண்மைக்கான பாதையை நோக்கி முன்னேறுவோம்.
- பிற தேசிய இனங்களுடன் ஒன்றிணைவோம்.
- கம்யூனிஸ்ட்டுகளாக ஒருங்கிணைவோம்.
- புரட்சிப்பாதையில் முன்னேறுவோம்.
- புரட்சி ஓங்குக.

✧✧✧✧

# உபா (UAPA) :
# நிரந்தர நெருக்கடி நிலையும்! பறிக்கப்படும் உரிமைகளும்!!

பொன்.சந்திரன்
உதவி : நிவேதிதா

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்ற பெயரில், இந்திய அரசின் கையில் இருக்கும் மிக வலிமையான ஆயுதமாக இன்று உருவெடுத்துள்ளது.




'சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்' (UAPA). பி.யு.சி.எல் (ஊஷீஊீஸி) உள்ளிட்ட நாடு முழுவதிலும் உள்ள மனித உரிமை அமைப்புகள், இந்தச் சட்டத்தின் விரிவடைந்து வரும் பிடியை தொடர்ந்து எதிர்த்து வருகின்றன. அவர்களின் எதிர்ப்பு வன்முறை மீதான பரிதாபத்தால் உருவானது அல்ல; மாறாக, விசாரணையின்றி நீண்ட காலம் சிறையில் அடைப்பது ஒரு ஜனநாயகத்திற்கு என்னென்ன பாதிப்புகளை ஏற்படுத்தும் என்ற ஆழ்ந்த கவலையினால் உருவானது.

**மனித உரிமை அமைப்புகள் ஏன் உபா-வை எதிர்க்கின்றன?**

இந்த விமர்சனங்களின் மையப்புள்ளியாக விளங்குவது இச்சட்டத்தின் பிரிவு 43ம்(5) - அதாவது பிணை வழங்குவதற்கான கடுமையான நிபந்தனை. சாதாரண குற்றவியல் சட்டத்தில், ஒருவரின் குற்றத்தை அரசு நிரூபிக்க வேண்டும். ஆனால் உபா சட்டத்தின் கீழ், அரசுத் தரப்பு முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் 'முதல் பார்வையில் உண்மையெனத் தெரிந்தால்' (prima facie true), பிணை மறுக்கப்பட வேண்டும். இந்த நிலையில், சாட்சியங்களின் நம்பகத்தன்மையை ஆராய நீதிமன்றங்களுக்கு அனுமதி இல்லை. இதன் விளைவாக, விசாரணை தொடங்குவதற்கு முன்பே பல ஆண்டுகள் சிறையில் கழிக்க வேண்டியுள்ளது - இங்கு 'விசாரணை முறையே ஒரு தண்டனையாக' மாறுகிறது.

இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள தெளிவற்ற வார்த்தைகளையும் உரிமை அமைப்புகள் கேள்வி எழுப்புகின்றன. 'சட்டவிரோத நடவடிக்கை', 'பயங்கரவாதச் செயல்' போன்ற வார்த்தைகள் வன்முறைக்கும், அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகளுக்கும் இடையிலான மெல்லிய கோட்டை அழிக்கும் வகையில் விரிவாக உள்ளன. பொருளாதார பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்ற

பெயரில் போராட்டங்கள், பேச்சுகள் அல்லது எழுத்துக்கள் கூட பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்பட வாய்ப்புள்ளது. ஜனநாயகத்தின் குரல் சட்டத்தின் மொழியில் பயங்கரவாதமாகப் பார்க்கப்படும்போது, அந்த ஜனநாயகம் ஆபத்தில் விழுகிறது.

2019-ஆம் ஆண்டு திருத்தம் இந்தக் கவலைகளை மேலும் அதிகரித்தது. முதல்முறையாக, அமைப்புகளைத் தாண்டி தனிநபர்களையும் 'பயங்கரவாதி' என அறிவித்து, முறையான விசாரணை இன்றி நான்காவது அட்டவணையில் சேர்க்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. இது ஒரு 'சமூக மரணத்திற்கு' (Civil Death) சமமானது என விமர்சகர்கள் வாதிடுகின்றனர்: வங்கி கணக்குகள் முடக்கப்படுவது, சமூக அவப்பெயர் என ஒருவரது வாழ்க்கை குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படும் முன்பே சிதைக்கப்படுகிறது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகள் ஒரு அதிர்ச்சிகரமான உண்மையைக் கூறுகின்றன: ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டாலும், தண்டனை விகிதம் மிக ஒற்றை இலக்கத்திலேயே உள்ளது. விடுதலையாவோரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்போது, நாம் பயங்கரவாதத்தைத் தடுக்கிறோமா அல்லது ஒருவரைச் சிறையில் அடைப்பதை இயல்பாக்குகிறோமா என்ற கேள்வி எழுகிறது.

**முந்தைய 'கொடூர' சட்டங்களிலிருந்து உபா எவ்வாறு வேறுபடுகிறது?**

இந்தியா இதற்கு முன்பும் பல பாதுகாப்புச் சட்டங்களைக் கண்டுள்ளது (DIR, MISA, TADA, POTA). அவற்றில் பெரும்பாலானவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு காலாவதியாகும் (Sunset clause) தன்மையைக் கொண்டிருந்தன. ஆனால் 1967-ல் பிரிவினைவாதத்திற்கு எதிராகத் தொடங்கப்பட்ட உபா, 2004 மற்றும் 2019 திருத்தங்களுக்குப் பிறகு ஒரு நிரந்தரமான சட்டமாக மாறிவிட்டது.

TADA மற்றும் POTA சட்டங்களில் காவல் துறையிடம் அளிக்கப்படும் வாக்குமூலம் ஆதாரமாக ஏற்கப்படும்; உபா-வில் அது கிடையாது. இருப்பினும், இதிலுள்ள பிணை கட்டுப்பாடுகள் காரணமாக ஒரு நபர் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணையின்றி சிறையில் இருக்கும் சூழல் உள்ளது. இதை 'சாதாரண சட்டத்திற்குள் ஒளிந்திருக்கும் நிரந்தர அவசரநிலை' என்று விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

**நீதிமன்றங்களும் பிணை குறித்த கேள்விகளும்**

நீதித்துறையின் பங்கு இதில் மிக முக்கியமானது. 2019-ஆம் ஆண்டின் வட்டாலி (நிழிமிழியிஷ்) தீர்ப்பில், பிணை வழங்கும் நிலையில் நீதிமன்றங்கள் ஒரு 'குறு விசாரணை' (mini-trial) நடத்தக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. இது பிணை பெறுவதை மேலும் கடினமாக்கியது.

இருப்பினும், சமீபத்திய ஆண்டுகளில் அரசியல் சாசனத்தின் 21-வது பிரிவை (தனிநபர் சுதந்திரம்) முன்னிறுத்தி, நீண்ட கால சிறைவாசம் அடிப்படை உரிமை மீறல் என்று நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. கே.ஏ. நஜீப் வழக்கில், விசாரணை முடிவில்லாமல் தள்ளிப்போகும் போது நீதிமன்றங்கள் பிணை வழங்க முடியும் என்று தெளிவுபடுத்தப்பட்டது.

பெரிய கேள்வி

உபா-வை ஆதரிப்பவர்கள், அசாதாரணமான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அசாதாரணமான சட்டங்கள் தேவை என்கின்றனர். ஆனால், இறையாண்மையைக் காக்க உருவாக்கப்படும் சட்டங்கள், முறையாகக் கண்காணிக்கப்படாவிட்டால் அவை மக்களின் சுதந்திரத்தையே அழித்துவிடும் என்பதை வரலாறு நமக்குக் கற்பிக்கிறது. இது தேசிய பாதுகாப்புக்கும் சிவில் உரிமைகளுக்கும் இடையிலான மோதல் அல்ல; மாறாக, ஒன்றைச் சிதைக்காமல் இன்னொன்றை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்த விவாதம்.

ஒரு ஜனநாயகத்தின் வலிமை தண்டிப்பதில் மட்டும் இல்லை, தான் பாதுகாப்பதாகக் கூறும் சுதந்திரங்களை உறுதி செய்வதிலும் உள்ளது.

✧✧✧✧

# ஈரான் மீது போர்:
# உலக ஒழுங்கை மதிக்காத அமெரிக்காவும் இசுரேலும்

தோழர். தியாகு

மன்றோ கொள்கை அறிவிக்கப்பெற்று இருநூறு ஆண்டுகளுக்கு மேலாயிற்று. அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ஜேம்ஸ் மன்றோ 1823 திசம்பர் 2ஆம் நாள் இந்தக் கொள்கையைப் பறைசாற்றினார். மேற்கு அரைக்கோளம் (அமெரிக்கக் கண்டம்) முழுவதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (அமெரிக்க வல்லரசின்) செல்வாக்குக்கு உட்பட்டது, ஐரோப்பிய அரசுகள் அங்கே எந்த நாட்டிலும் எந்த வகையிலும் தலையிடலாகாது என்பதுதான் மன்றோ கொள்கை. மொத்தத்தில் வட அமெரிக்காவும் தென் அமெரிக்காவும் நடு அமெரிக்காவும் அமெரிக்க வல்லரசின் கொல்லைப்புறம் என்பதுதான் இதன் பொருள்.

மன்றோ கொள்கை இன்று தொனால்டு துரும்ப்பினால் உறுதி செய்யப்பட்டு விரிவாக்கப்பட்டுள்ளது. இதை இன்று 'தொன்றோ கொள்கை' எனலாம். இந்தக் கொள்கையின் மேற்கு அரைக்கோளம் மட்டுமல்ல, புவிக் கோளம் முழுவதுமே அமெரிக்க வல்லரசின் செல்வாக்கு மண்டலமாகக் கருதப்படுகிறது. துரும்ப்பின் ஆட்சியில் முழு உலகுமே வாசிங்டனின் கொல்லைப்புறமாக மதிக்கப்படுகிறது.



சோவியத்து வீழ்ச்சிக்குப் பின் இந்தப் புவிக்கோளம் அரசியலில் ஒருதுருவ உலகமாகி விட்டதாக புவிசார் அரசியல் விற்பன்னர்கள் அறிவித்துக் கொண்டனர். புவியியலில் மட்டுமன்று, அரசியலிலும் 'ஒருதுருவ உலகம்' வெற்று மாயைதான். தொடர்ந்து மாறிவரும் உலகில் அதனால் நிலைத்து நீடிக்க முடியாது என்பதை காலம் வெகுவிரைவில் உணர்த்திற்று. சீனத்தின் பாய்ச்சல் வேக வளர்ச்சி அதனை அமெரிக்காவுக்குப் போட்டியான பொருளியல் வல்லரசாக நிலைநிறுத்தி வருகிறது. இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தன்னாட்சி வேட்கையும், ஐரோப்பிய வல்லரசுகள் வட அமெரிக்க வல்லரசுக்கு முழுக்கக் கட்டுப்பட மறுப்பதும், பாலத்தீனம் உள்ளிட்ட ஒடுக்குண்ட தேசங்களின் தன்னுரிமைப் போராட்டமும் அமெரிக்காவின் ஒற்றைத்துருவ அரசியலைப் பலதிறப்பட்ட ஆற்றல்களின் பலதுருவ அரசியலால் மாற்றீடு செய்து வருகின்றன.

இந்த மாற்றத்தை அமெரிக்க ஆளும் வகுப்பினால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்தச் சகிப்பின்மையின் வெளிப்பாடுதான் தொனால்டு துரும்ப்பின் சண்டியத் தனமான சதிராட்டம்!

தொனால்டு துரும்ப் இரண்டாம் முறை அதிபர் தேர்தலில் போட்டியிட்ட போது கொடுத்த முதன்மையான வாக்குறுதிகளில் ஒன்று: அமெரிக்காவின் முடிவில்லாத போர்களுக்கு முடிவு காண்பேன் என்பதாகும். உருசியா–உக்ரைன் போருக்கு முடிவு காண்பதாகச் சொல்லி விளாதிமிர் புத்தினுக்கு ஆசை காட்டிப் பார்த்தார். உக்ரைனிய ஜெலன்ஸ்கியின் கையை முறுக்கிப் பார்த்தார். எதுவும் பலிக்கவில்லை.

பாலத்தின மக்களை இனவழிப்புச் செய்யும் இசுரேலின் காசா போருக்கு முழுமையாக முட்டுக் கொடுத்துத்தான் துரும்ப் அந்தப் போருக்கு முடிவு கட்டினார். பாலத்தின இனவழிப்புக்கு மட்டுமல்லாமல், சீனத்தையும் உருசியாவையும் கட்டுப்படுத்தி வைக்கவும் கூட ஈரானை வீழ்த்த வேண்டும் என்பது அமெரிக்க வல்லரசின் கணக்கு. ஈரானை வீழ்த்துவது சயோனிச இசுரேலின் விரிவாதிக்க நலனுக்கும், அமெரிக்க வல்லரசின் எரிபொருள்சார் வணிக நலனுக்கும் தேவைப்படுகிறது.

பிப்ரவரி 28ஆம் நாள் அமெரிக்காவும் இசுரேலும் ஈரான் மீது முழுவீச்சில் போர் தொடுத்து ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனியைப் படுகொலை செய்தன. ஈரான் மீது போர் தொடுப்பதற்கு துரும்ப்பும் நெதன்யாகுவும் சொல்லக் கூடிய காரணங்கள்: 1) ஈரான் அணுவாய்தம் செய்யக் கூடிய நிலையில் உள்ளது; 2) நடுக்கிழக்கு வட்டாரத்தில் திகிலிய (பயங்கரவாத) அமைப்புகளுக்குத் துணை செய்கிறது; 3) ஈரானிய அரசு அந்நாட்டு மக்களை அடிமைகளாக ஒடுக்கி வைத்திருப்பதால், அங்கு ஆட்சி மாற்றம் தேவைப்படுகிறது. இந்தக் காரணங்கள் எல்லாம் உண்மை என்று வைத்துக் கொண்டாலும் இறைமை கொண்ட ஒரு நாட்டின் மீது இரு அயல் அரசுகள் இவ்வாறு போர் தொடுப்பதற்குப் பன்னாட்டுச் சட்ட முறையில் இடமில்லை.

முதலாவதாக, உலகில் மிகப் பெரிய அளவில் அணுவாய்தங்களைக் குவித்து வைத்திருப்பது அமெரிக்க வல்லரசுதான். அமெரிக்க உதவி தவிர இசுரேலும் தன்னளவிலேயே அணுவாய்தங்கள் வைத்திருப்பது மறுக்கப்படவில்லை. ஆறு மாதம் முன்புதான் ஈரானின் அணுக்கரு ஆராய்ச்சித் திட்டத்தைக் குண்டு போட்டு அழித்து விட்டதாக துரும்ப்பின் ஆட்சி சொல்லிக் கொண்டது.

இரண்டாவதாக, லெபனானின் ஹிஸ்பொல்லா, யேமனின் ஹூதி, காசாவின் ஹாமாஸ் போன்ற அமைப்புகள் இசுரேலிய விரிவாதிக்கத்துக்கும் அமெரிக்க வேட்டைக்கும் தடையாக இருப்பதால் அவை பயங்கரவாத அமைப்புகளாகப் படம்பிடித்துக் காட்டப்படுகின்றன. அரச பயங்கரவாதத்தின் முழு உருவாகத் திகழும் இசுரேலிய சயோனிச அரசைத் தன் அடியாளாக வைத்துக் கொண்டுதான் அமெரிக்கா ஈரானின் பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறது.

மூன்றாவதாக, ஈரானில் ஆட்சி மாற்றம் என்பது முழுக்க முழுக்க ஈரானிய மக்களின் உரிமை ஆகுமே தவிர அமெரிக்காவோ இசுரேலோ போர் தொடுத்துப் படுகொலைகள் செய்து திணிக்கக் கூடிய ஒன்றன்று.

இசுரேல் தன் தேவைக்காக அமெரிக்காவை இந்தப் போரில் இழுத்து விட்டிருப்பதாக ஒரு கட்டத்தில் அமெரிக்க அயலுறவு அமைச்சரே சொல்லியிருப்பதை அமெரிக்க செனட் விவாதத்தில் சில உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஈரான் தாக்கப் போவது தெரிந்து அதை முன்கூட்டியே தடுப்பதற்காகவே இந்தத் திடீர்ப் போர் என்ற இசுரேலியக் கதையை இசுரேலிலேயே யாரும் நம்பவில்லை.



ஈரான் இந்தப் போரில் தன் உச்சத் தலைவரையும், 13 மாதக் குழந்தை உட்பட அவர் குடும்பத்தைச் சேர்ந்த சிலரையும், ஆட்சியில் முக்கியமான மேலும் சிலரையும் பறிகொடுத்துள்ளது. தெஹ்ரானில் 165க்கு மேற்பட்ட பள்ளிச் சிறுமியர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கொடும் தாக்குதல் தொடர்கிறது. ஈரான் இசுரேல் மீதும், பாரசிக வளைகுடாவிலும் யோர்தானிலும் உள்ள அமெரிக்கப் படைத்தளங்கள் மீதும் எறிகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது. உலகப் பொருளியலுக்கு உயிர்நாடியான ஹொர்முஸ் நீரிணையை மூடுவதாக அறிவித்துள்ளது. இந்தியா போன்ற எண்ணெய் இறக்குமதி நாடுகள் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதில் ஐயமில்லை.

ஈரானை வம்புக்கிழுத்து ஒழித்துக் கட்டும் அமெரிக்க, இசுரேலியக் கெடுமுயற்சி புதிதன்று. 2018இலும் 2025இலும் இப்படித்தான் நடந்தது. இந்த இரு நிகழ்வுகளிலும் போரைத் தூண்டியவர்கள் இதே துரும்ப்பும் இதே நெதன்யாகுவும்தான். இந்த முறை அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தை சுமுக முடிவை நெருங்கிக் கொண்டிருந்த போதுதான் இந்த இரட்டைப் பேய்கள் அவசரமாகப் போர் தொடுத்தன. ஈரான் அணுகுண்டு செய்வதில்லை என்றும், அணுவாய்த மூலப்பொருள் குவிப்பதில்லை என்றும் உறுதியளித்திருப்பதால் உடன்பாடு நெருங்கி விட்டதாக ஓமன் நாட்டின் அயலுறவு அமைச்சர் பாதர் அல்–புசைதி பிப்ரவரி 27ஆம் நாள் கூறினார். அடுத்த நாளே இரவோடு இரவாகக் கொடுந்தாக்கு நிகழ்ந்து விட்டது.

ஈரான் மக்களின் உரிமைகள் விடுமைகள் பற்றியெல்லாம் கவலைப்படுவதாகச் சொல்லும் துரும்ப் வகையறா தாங்கிப் பிடித்துள்ள அரபு முடியரசுகளின் வல்லாட்சியம் பற்றிச் சொல்லவே தேவையில்லை. சவுதி அரேபியாவிலும் யோர்தானிலும் குடியாட்சியம்தான் வாழ்கிறதா? உண்மையில் துனிசியா, எகிப்து என்று பற்றிப் பரவிக் கொண்டிருந்த அரபு வசந்தத்தின் குடியாட்சிய அலையை வழிமறித்துக் குருதிச் சேற்றில் அமிழ்த்தியதே அமெரிக்க வல்லரசுதான்.

பன்னாட்டுச் சட்டங்களையோ ஐநா வடிவிலான உலக ஒழுங்கையோ எள்முனையளவும் மதிக்காத கொடுங்கோலர்கள் அமெரிக்க துரும்ப்பும் இசுரேலிய நெத்தன்யாகுவும். ஓராண்டுக் காலத்தில் ஏழு நாடுகள் மீது குண்டு வீசியிருப்பவர் துரும்ப்பு. பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தால் போர்க் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருப்பவர் நெதன்யாகு. காசாவிலும் லெபனானிலும் தெஹ்ரானிலும் குழந்தைகளின் குருதியில் கைநனைத்திருக்கும் கொலைகார இரட்டையர்கள் இவர்கள். இட்லரும் முசோலினியும் போல் முடிந்து போக எல்லாத் தகுதியும் கொண்டவர்கள்.

துரும்ப்பும் நெதன்யாகுவும் அதிகார வெறி கொண்டு இன்று நடுக்கிழக்கு வட்டாரத்தையே போரில் தள்ளி விட்டுள்ளனர். உடனே இவர்களின் கைகள் கட்டப்படவில்லை என்றால் உலகையே பேரழிவுப் போருக்குள் தள்ளி விட்டு விடுவார்கள். அதற்கு முன் இவர்கள் இந்தப் போரில் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, அவரவர் நாட்டிலும் அதிகாரத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டுக் கூண்டிலேற்றப்பட வேண்டும். வரலாற்றின் சுவரில் அப்படித்தான் எழுதப்பட்டுள்ளது.

இறுதியாக, ஈரான் மீதான அமெரிக்க–இசுரேலியப் போர் இந்தியாவிலிருக்கும் நமக்குத் தொலைவுச் செய்தி எனக் கருத வேண்டாம். இசுரேல், அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய மூன்று அரசுகளோடும் சேர்ந்து 'ஐ2 யு2' உடன்படிக்கையில் இந்திய அரசு ஒப்பமிட்டுள்ளது என்பதால் இந்தப் போர்ப் பாவத்தில் நமக்கும் பங்குள்ளது. யூத சயோனிச நெதன்யாகுவோடு இந்து தேசிய நரேந்திர மோதிக்குள்ள நெருக்கம் போர் தொடங்குவதற்கு முந்தைய நாள் கூட டெல் அவிவில் காட்சிப்படுத்தப்பட்டது. இசுரேல் தந்தை நாடாம்! இந்தியா தாய்நாடாம்! எதற்கு? இசுலாமியருக்கு எதிரான வெறுப்புக்கும் கொலைவெறிக்கும்!

உலக அமைதியின் பகைவர்கள் ஓரணியில்! நாம்?

✦✦✦✦✦✦

# வரவு - செலவுத்திட்டம் 2026 - 27
# யாருடைய நலன்களுக்கானது?

மு. வசந்தகுமார்

பிப்ரவரி 1ந் தேதி பாராளுமன்றத்தில் 2026 27க்கான வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ளார். இந்த நிதி நிலை அறிக்கையை '140 கோடி இந்தியர்களின் விருப்பங்களை பிரதிபலிக்கும் வரலாற்று பட்ஜெட்' எனப் பாராட்டியுள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

### உண்மையில் இந்த நிதிநிலை அறிக்கை அவ்வாறுதான் அமைந்துள்ளதா?

இந்த நிதிநிலை அறிக்கையை முதலாளிகளின் அனைத்து அமைப்புகளும் பாராட்டி வரவேற்றுள்ளன என்பது உண்மைதான். ஆனால் இதைக் குறை கூறி குறு, சிறு, நடுத்தர முதலாளிகள் விமர்சித்துள்ளனர் என்பதும், விவசாயிகளின் அமைப்புகள் கடுமையாக விமர்சித்துள்ளன என்பதும் உண்மை.




இவை உணர்த்தும் உண்மை என்னவென்றால் உண்மையில் இந்த நிதிநிலை அறிக்கை, பிரதமர் மோடி கூறுவது போல், 140 கோடி இந்தியர்களின் விருப்பங்களைப் பிரதிபலிக்கவில்லை என்பதும் பெரும் குழுமங்களின் (கார்ப்பரேட்) விருப்பங்களையே பிரதிபலிக்கின்றன என்பதும்தான் உண்மை.

### விவசாயத் தொழிலாளர்கள்


மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மூடுவிழா நடத்திவிட்டு மோடி அரசாங்கம் புதியதாகக் கொண்டுவந்துள்ள ஊரக வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதமளிக்கும் (கிராமின்) திட்டத்திற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 95,000 கோடியாகும். சுமார் ஒன்பது கோடி குடும்பங்களுக்கு, குடும்பத்தில் ஒருவருக்கு ரூ. 355 தினக்கூலி வீதம் வருடத்திற்கு 125 நாட்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமானால் மொத்தச் செலவு ரூ. 4 இலட்சம் கோடி ஆகும். அதில் ஒன்றிய அரசின் பங்கான 60%ற்கு ரூ 2.4 இலட்சம் கோடி தேவைப்படும். ஆனால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியோ ஐந்தில் இரண்டு பங்குதான். எனவே இந்தத் திட்டம் கிராமப்புற ஏழைகளின் வேலை வாய்ப்புக்கும் வாழ்வாதாரத்திற்கும் உண்மையில் உத்தரவாதமளிக்கும் திட்டமாக இருக்காது. விவசாயத் தொழிலாளர்களை ஏமாற்றும் திட்டமாகவே இருக்கும்.

### கல்வியும் சுகாதாரமும்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை, அதாவது உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை மட்டும் வைத்துத் தீர்மானிக்கக் கூடாது. அந்த வளர்ச்சியின் பயன் அனைத்து மக்களுக்கும் சென்றடைகின்றதா, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதா என்பதை வைத்துத்தான் அதன் வளர்ச்சியைத் தீர்மானிக்க வேண்டும்; ஒரு நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை அளவிடும் முக்கிய அளவுகோல்களில் முக்கியமானவை கல்வியும் சுகாதாரமும் ஆகும். ஒரு நாட்டிலுள்ள அரசாங்கம் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதிலிருந்து மக்கள் மீதான அதன் அக்கறையைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நிதி நிலை அறிக்கையில் கல்விக்காக ரூ.1.39 இலட்சம் கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% கல்விக்காக ஒதுக்கப்பட வேண்டும் என 1966ல் கோத்தாரி ஆணையம் பரிந்துரைத்தது.

2020 ஆம் ஆண்டின் தேசிணுக் கல்விக் கொள்கையும் அதை வலியுறுத்தியது. இருந்தும் இந்த நிதிநிலை அறிக்கையில் உள்நாட்டு உற்பத்தியில் 0.5% க்கும் கீழேயே ஒதுக்கப்பட்டுள்ளது (இந்தியாவின் மொத்த




உள்நாட்டு உற்பத்தி 2026ல் சுமார் ரூ400 இலட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது). தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்விக்காக அண்டை நாடுகளான பாகிஸ்தான் 2.1%ம், இலங்கை 2.04% வங்காளதேசம் 1.72%ம், சீனா 4.02%ம் ஒதுக்கும்போது இந்திய அரசாங்கம் அதைவிடக் குறைவாகவே ஒதுக்கி உள்ளதைப் பார்க்கின்றோம்.


இங்கு மருத்துவம் என்பது மக்களுக்குப் பெரும் செலவு வைக்கக் கூடிய ஒன்றாக உள்ளது. பெரும்பான்மையான மக்கள் தம்முடைய மருத்துவத்திற்காக வருமானத்தை விட அதிகமாகச் செலவு செய்ய வேண்டியுள்ளது; மருத்துவச் செலவுக்காக மக்கள் தமது சேமிப்புகளையும் இழந்து பெரும் கடன் சுமைக்கு ஆளாகி வருகின்றனர். அதற்குக் காரணம் அரசாங்கம் போதிய நிதி ஒதுக்கி தேவையான மருத்துவ உட்கட்டமைப்புகளை அரசுத் துறையில் உருவாக்கமாலிருப்பதுதான். இந்த நிதி நிலை அறிக்கையிலும் அதுதான் வெளிப்பட்டுள்ளது. ரூ.1.06 இலட்சம் கோடி மருத்துவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது நமது உள் நாட்டு மொத்த உற்பத்தியில் 0.3% க்கும் கீழ் உள்ளது. இது 2017ல் தேசிய சுகாதாரக் கொள்கை பரிந்துரைத்த அளவான 2.5%ஐ விட சுமார் 8 மடங்கு குறைவாக உள்ளது. அதே சமயத்தில் சீனா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.05%ம், வங்காள தேசம் 2.36%ம், இலங்கை 1.76%ம், பாகிஸ்தான்1%ம் சுகாதாரத்திற்காக ஒதுக்கி உள்ளன.

கல்விக்கும் சுகாதாரத்திற்கும் போதிய நிதி ஒதுக்காமல் இந்த அரசாங்கம் தொடர்ந்து கல்வித்துறையிலும் சுகாதாரத்துறையிலும் தனியார் துறைகள் மக்களைக் கொள்ளையடிக்க வழி செய்து வருகின்றது.

மேலும் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.6701 கோடி செலவிடப்படவில்லை. சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.3686 கோடி செலவிடப்படவில்லை. இவை மக்களின் நலனில்இந்த அரசாங்கத்திற்கு உள்ள அக்கறையின்மையைத்தான் வெளிப்படுத்துகின்றன.

## குறு, சிறு, நடுத்தரத் தொழில்துறையும் வேளாண்மைத் துறையும்

சுமார் 11 கோடி பேர்களுக்கு, அதாவது நாட்டில் மொத்தத் தொழிலாளர்களில் 40 விழுக்காட்டினருக்கு வேலை வாய்ப்பை வழங்கி வருகின்றன குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள். மொத்த ஏற்றுமதியில் அவற்றின் பங்கு 40-45% ஆக உள்ளது. இந்தத் துறை அமெரிக்க ட்ரம்பின் கடுமையான வரி விதிப்பினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள துறையாகும். இந்த நிதிநிலை அறிக்கையில் அந்தத் துறைக்கு ரூ. 10,000 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. 'இது யானைப் பசிக்கு சோளப் பொரி போல உள்ளது' என குறு, சிறு, நடுத்தர முதலாளிகளைக் கொண்ட இந்தியத் தொழிலதிபர்கள் சங்கத்தின் தேசியத் தலைவர் ரகுநாதன் கூறுகிறார்.



மேலும் அவர், அமெரிக்காவின் வரி விதிப்பால் பல நிறுவனங்கள் அழியக் கூடிய நிலையில் உள்ளன என்றும், வேலை வாய்ப்பு அதிகரிக்கப்பட வேண்டுமானால் சிறு, குறு நடுத்தரத் தொழில்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும், இந்த நிதி நிலை அறிக்கையில் அதற்கான அறிவிப்பை எதிர்பார்த்தோம். ஆனால் ஏமாற்றமடைந்து விட்டோம் என்றும் கூறுகிறார்.

நாட்டிலுள்ள உழைக்கும் மக்களில் 45 விழுக்காட்டினருக்கு வாழ்வாதாரமாக இங்கு வேளாண்மைத் துறை இருந்து வருகிறது. ஆனால் அந்தத் துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.1,31,561 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் எதிர்பார்ப்பை இந்த நிதி நிலை அறிக்கை நிறைவேற்றவில்லை என இடதுசாரி அகில இந்திய விவசாயிகள் சங்கம் மட்டுமல்லாமல், சங் பரிவாரத்தைத் சேர்ந்த பாரதிய விவசாயிகள் சங்கமும் கண்டித்துள்ளன.

### பாதுகாப்புத் துறை

பெரும்பான்மையான மக்களின் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றை அலட்சியப்படுத்தியும் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள், குறு, சிறு, நடுத்தர முதலாளிகளின் நலன்களைப் புறந்தள்ளியும் உள்ள வரவு செலவுத் திட்டம் பாதுகாப்புத் துறைக்கு மட்டும் ரூ.7.84 இலட்சம் கோடியை, அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 2 விழுக்காட்டை, ஒதுக்கியுள்ளது. இதனால் பெரும் பயன் அடைபவர்கள் ஆயுத உற்பத்தியாளர்களும், ஆயுத வியாபாரிகளும், அதிகார வர்க்கமும்தான்.

### வரிச் சலுகை

கல்விக்கும் சுகாதாரத்திற்கும் கிராமப்புற வேலை வாய்ப்புக்கும் மிகவும் குறைவான நிதியை ஒதுக்கீடு செய்துள்ள அதே சமயத்தில் பன்னாட்டு நிறுவனங்களான மைக்ரோசாப்ட், அமேசான், கூகுள் ஆகியவற்றுக்கு மிகப் பெரும் வரிச் சலுகையை இந்த அரசாங்கம் வாரி வழங்கியுள்ளது. அந்த நிறுவனங்கள் இந்தியாவில் அமைக்க உள்ள தரவு மையங்களுக்கு (ata centre) 2047 வரை வரிகள் கிடையாது என அறிவித்துள்ளது.

### கொள்ளையடிக்கும் கார்ப்பரேட்களும் கோடீசுவரர்களும்

ஏற்கனவே இந்தியாவிற்குக் கடன் சுமார் ரூ.200 இலட்சம் கோடி உள்ளது. மேலும், இந்த வரவு – செலவுத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக இந்த ஆண்டு ரூ17.2 இலட்சம் கோடியைக் கடன் பத்திரங்கள் மூலம் திரட்டப்போகிறது இந்திய அரசாங்கம். கடன்பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் வட்டி வாங்கிக் கொழுப்பவர்கள் கார்ப்பரேட்களும் கோடீசுவர்களும் தான்; நிதிப்பற்றாக் குறை வரவு செலவுத் திட்டத்தால் பெரும் பயன் அடைபவர்கள் அவர்கள் தான்.

இது பற்றி முன்னாள் மத்திய வருவாய்த்துறை செயலர் எம்.ஆர்.சிவராமன் கூறுவது நமது கவனத்திற்குரியது. அவர், ‘கடனுக்கான வட்டி 50 சதவீத வரி வருவாயை விழுங்கி விடுகிறது. அடுத்த நிதியாண்டில் (2026-27) மத்திய அரசின் நிகர வரிவருவாய் ரூ. 28.66 இலட்சம் கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது; இதிலிருந்து கடனுக்கான வட்டியாக ரூ.14.09 இலட்சம் கோடியைச் செலுத்த வேண்டியிருக்கும். இந்த வட்டித் தொகை பெருநிறுவனங்கள் (கார்ப்பரேட் நிறுவனங்கள்), கோடீசுவரர்களுக்குச் சென்றுவிடும். இது அப்பட்டமான கொள்ளையாகும். ஆக, கோடிக் கணக்கான இந்தியர்கள் செலுத்தும் வரியில் 50 சதவீத அளவுக்கு பெரும் நிறுவனங்களுக்கும் கோடீசுவரர்களுக்கும் செல்லும் நிலை நீடிக்கிறது.




இது மக்களின் வருமானத்தில் ஏற்றத்தாழ்வையும் அதிகரிக்கிறது’ என்கிறார். (தினமணி நடுப்பக்க கட்டுரை 3.2.26)

### பாரதம் என்பது யார்?

உலகப் பொருளாதாரம் வர்த்தகப் போரிலும், நிலையற்ற தன்மையிலும் கடும் சிக்கலிலும் மூழ்கியுள்ள நிலைமையிலும் இந்தியப் பொருளாதாரம் தடுமாறாமல் 7.2% வீதம் நிலையாக வளர்ந்து கொண்டிருக்கிறது என நிதி அறிக்கையைத் தாக்கல் செய்த நிதியமைச்சர் பெருமை பாராட்டிக் கொள்கிறார். இது வரலாற்றுச் சிறப்புமிக்க பட்ஜெட் என்றும், வளர்ந்த பாரதத்திற்கான வழிகாட்டும் பட்ஜெட் என்றும் புகழ் பாடுகிறார் பிரதமர்.

ஆனால் உண்மை நிலைமையோ அதற்கு முரணாக இருக்கின்றன. 2025 ஆம் ஆண்டு உலகளாவிய பட்டினி அட்டவணை 123 நாடுகளில் இந்தியா 102 வது இடத்தில் உள்ளதாகத் தெரிவிக்கிறது. நாட்டில் உள்ள மக்களில் 80

விழுக்காட்டினர் மான்ய விலையில் உணவு தானியங்களைப் பெற்று தங்களுடைய பசியைப் போக்கிக் கொள்ளும் அவல நிலையில் உள்ளனர்.

இந்திய இளைஞர்கள் மத்தியில் 17.6% வேலை இல்லாத் திண்டாட்டம் நிலவுவதாக மார்கன் ஸ்டான்லி என்னும் நிதிச் சேவை நிறுவனம் கூறுகிறது. இந்த நிலையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு முடிவு கட்டியதன் மூலம் கிராமப்புறங்களில் கடுமையான வேலைவாய்ப்புத் திண்டாட்டத்தையும் பெரும் வருவாய் இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது மோடி அரசாங்கம்.

மேலும், புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைக் கொண்டு வந்ததன் மூலம் தொழிலாளர்களைக் கடுமையாகச் சுரண்டி முதலாளிகளை மேலும் கொழுக்க வைக்கிறது மோடியின் அரசாங்கம்; உலகிலேயே அதிக அளவு ஏற்றத்தாழ்வு கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா மாறி உள்ளது.

சமூகத்தில் உள்ள அனைத்து மக்களின் வாழ்வையும் கனவுகளையும் சிதைத்து விட்டு வளர்ந்த பாரதத்திற்கான வழிகாட்டும் பட்ஜெட் என மோடி கூறுவதன் பொருள் என்ன? அவருக்கு இந்தியா என்பது மக்கள் அல்ல. முதலாளிகள்தான். அவர்களின் வளர்ச்சிதான் மோடியைப் பொறுத்தவரையிலும் பாரதத்தின் வளர்ச்சி.

எனவே, வழக்கம்போல, இந்த வரவு செலவுத் திட்டமும் சமூகத்தில் உள்ள அனைத்து மக்களின் நலன்களைப் புறக்கணித்துவிட்டு, சமூகத்தின் அனைத்து வருமானங்களையும் நாட்டின் அனைத்து வளங்களையும் கார்ப்பொரேட் முதலாளிகளின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் பயன்படுத்துவதற்கான திட்டமாகவே உள்ளது.

மு.வசந்தகுமார்

## தமிழ்த் தேச இறையாண்மை செயலாளர் தோழர் பாரி கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்



2024 அக்டோபர் சென்னையில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தை (SEIAA) முற்றுகை இடும் போராட்டதிலும், சுற்றுசூழல் ஆர்வலர் ஜகபர் அலியின் படுகொலையைக் கண்டித்தும், 2024, அவரது ஓராண்டு நினைவுநாள் கூட்டத்தில் ஜனவரி 17, 2025 லும், புதுக்கோட்டை, காமராஜபுரம் நகருக்கு நத்தம் பட்டாவை பத்திரப் பதிவு செய்யாத தமிழக அரசைக் கண்டித்து 16.12.2024 அன்று உரிமை மீட்புக் குழு சார்பில் நடைபெற்ற ஆர்பாட்டத்திலும், 2024 டிசம்பரில் மதுரையில் டங்ஸ்டன் சுரங்கத் திட்ட எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு நடத்திய ஆர்பாட்டத்திலும், 2025 மே நாள் பொதுக்கூட்டம் தமிழ்த் தேச இறையாண்மை சார்பில் புதுக்கோட்டையின் கூட்டத்திலும், 2025 புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு கிராமத்தில் பட்டியல் சாதி ஆதித் தமிழர் மீது சாதிவெறிக் கும்பல் தாக்குதலை ஆய்வு செய்ய சென்ற சாதி ஒழிப்பு முன்னணி ரமணியுடன், 12.9.2025 தருமபுரி மாவட்டம், நாயக்கன்கொட்டாய் கிராமத்தில் தோழர்கள் அப்பு, பாலன் ஆகியோரின் வீரவணக்க நாள் இடதுசாரிகள் ஒருங்கிணைப்பு பேரணியிலும், 17.9.2025 புதுக்கோட்டை மாவட்டம், பாப்பான்விடுதி ஏகலைவன் இலக்கிய வட்டம் கற்றல் மையத்தில் பெரியார் பிறந்தநாள் விழாவிலும், 21.9.2025 தமிழக புரட்சிக் கழகம் நடத்திய சாதி ஆணவப் படுகொலைத் தடுப்புச் சட்டம் உடனே இயற்றிடு! என்ற கருத்தரங்கிலும், மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி வட்டம், கல்லாங்காடு பகுதியில் அமைய உள்ள சிப்காட்டை எதிர்த்து மேலூரில் சட்ட விரோத கல் குவாரி எதிர்ப்பு இயக்கம் 24.10.2025 இல் நடத்திய ஆர்ப்பாட்டத்திலும், ஆம்ஸ்ராங் படுகொலையை கண்டித்து புதுக்கோட்டையில் அம்பேத்கர் புரட்சி தேசம் கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் தமிழ்த் தேச இறையாண்மை சார்பில் செயலாளர் பாரி (எ) ச. குபேந்திரன் கலந்து கொண்டார். மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் குவாரி தொடர்பான மக்கள் கருத்துக் கேட்பு பல கூட்டங்களில் கலந்து கொண்டார்.

# மரணம்

மீ.தே. தமிழரசன்

காலத்தோடு சேர்ந்து எல்லாம்தான் மாறிப் போய் விட்டது. அன்பு, உறவு, பாசம், நட்பு எல்லாம்தான்.

தன் அம்மா தன் கடைசி மூச்சை விட்டுக் கொண்டிருக்கிறாள் என்று அமலா ஃபோன் செய்தாள்.

அப்போது, வசீகரன் ஒரு பட வேலையில் டிஸ்கஷனில் இருந்தான். அடுத்த மாதம் ஷூட்டிங் செல்ல வேண்டும். அவன் தான் அந்தத் திரைப் படத்தின் Co-Director. மே மாதத்தில் படம் துவங்கியாக வேண்டும். இந்த ஏப்ரலில் இன்னும் இருபது நாள் தான் பாக்கி இருக்கிறது.

இந்த நெருக்கடியான சூழலில் தன் பொறுப்பு எத்தனை உத்திரவாதம் நிறைந்தது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் தன் இக்கட்டான நிலைமையை இயக்குநரிடம் எப்படிச் சொல்வது? வரமுடியாத சூழல் என்று மனைவியிடமும் சொல்ல முடியாது. அவன் இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்தான். உதாரணம் பழையதானாலும் அதுதான் பொருத்தமாக இருந்தது.

வசீகரனுக்கு எல்லாம் புதிது புதிதாக இருக்க வேண்டும். பழைய சிந்தனைகள் மரபுகள் என்று எதுவும் பிடிக்காது. பிறந்த எல்லோரும் ஒரு நாள் சாகத்தானே வேண்டும். அது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். பின் ஏன் சாவு என்றால் மனிதர்கள் இப்படி அலட்டிக் கொள்கிறார்கள். நிரந்தரப் பிரிவு என்பதாலா? சட்டென்று நினைவு தடம் புரண்டது.

வீட்டிற்குப் போய் அமலாவைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சி மூன்று மாதத்துக்கு மேலாகிவிட்டது. அவளை நினைத்தவுடன் அவள் சூடான மூச்சுக்காற்றை அவனால் உணரமுடிந்தது. போய் தான் ஆக வேண்டும் என்று உடனடியாக முடிவெடுத்தான்.

அமலாவின் அம்மா பவித்ராவுக்கு 60 வயது இருக்கும். யாருக்கும் கெடுதல் நினைக்காதவர். ரொம்பவும் நல்லவர். அவர்கள் கொடுத்த ஒரு கிரவுண்டு நிலத்தில்தான் அவனும் அமலாவும் தங்களுக்கென்று ஒரு வீடு கட்டிக் கொண்டார்கள். இல்லாவிட்டால் தனக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளத்தில் வீட்டிற்கு வாடகை கொடுத்து அவனால் காலத்தை ஓட்ட முடிந்திருக்காது.

அன்று, அதிகாலையிலேயே எழுந்து, முடிக்க வேண்டிய வேலைகளைப் பட்டியலிட்டு முடித்து விட்டு, ஊருக்குச் செல்ல இயக்குநரிடம் பர்மிஷன் கேட்பதற்காகக் காத்திருந்தான் வசீகரன்.

இயக்குநருக்கு வீடு அலுவலகம் ரெண்டும் ஒன்றுதான். விசாலமான அந்த பில்டிங்கில் அவருடைய அலுவலக அறையும் பெட்ரூமும் தனித்தனியே இருந்தன. அவனும் அலுவலகத்தின் உதவி இயக்குநர்களுக்கான அறையில் தான் தங்கியிருந்தான். அன்று, புதிய படத்திற்காக பல புதிய உதவி இயக்குநர்களை, இயக்குநர் நேர்காணல் செய்ய வேண்டியிருந்தது.

வசீகரன் நேர்காணலுக்கு வந்திருந்தவர்களிடம் அவர்கள் Bio-data க்களை வாங்கிக் கொண்டு, அவர்களைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டான். நேர்காணலுக்கு வந்திருந்தவர்களில் நேர்த்தியாக இரண்டு மூன்று Viscom படித்த பெண்களும் இருந்தார்கள்.

சரியாகப் பத்து மணிக்கு இயக்குநர் தன் அலுவலக அறைக்கு வந்தார். நேரந்தவறாமையை முறைப்படி கடைபிடிக்கும் வழக்கத்தைக் கூட வசீகரன் அவரிடமிருந்து தான் கற்றுக் கொண்டான்.

இயக்குநர் வந்ததும் இன்டர்வியூ துவங்கியது. அது முடிவதற்கு மணி 12க்கு மேல் ஆகிவிட்டது. தனக்குக் கிடைத்த சிறிய கேப்பில் இயக்குநரிடம் தன் நிலைமையைச் சொன்னான்.

அவர் மனிதாபிமானி. உடனடியாக அவனுக்குப் பணம் கொடுத்துக் கிளம்பச் சொன்னார். மாலை 7 மணிப் பேருந்தில் தான் இடம் இருந்தது.

Red Busல் Sleeper டிக்கெட் போட்டுக் கொடுத்தார் உதவி இயக்குநர் பரத். ஓட்டுநர் கிருஷ்ணா கோயம்பேடு பேருந்து நிலையம் வரை வந்து வசீகரனை கோவைக்கு பஸ் ஏற்றிவிட்டார்.

நெருக்கடியான சூழலில் இயக்குநரைத் தவிக்க விட்டு வந்தது வசீகரனின் மனதை உறுத்தியது. இன்னொன்று குடும்பப் பொறுப்பு. மனைவியின் அம்மாவின் கையறு நிலை. இந்த இரண்டு பொறுப்புக்களும் அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. இதையெல்லாம் தாண்டி மனதின் ஒரு மூலையில் மூன்று மாதங்களுக்குப் பின் அமலாவைப் பார்க்க இப்படியாவது ஒரு வாய்ப்பு

கிடைத்ததே என்கிற ஆவல் வேறு, அவன் குற்ற உணர்வை மேலும் கிளறிவிட்டது.

அமலாவின் அம்மாவுக்கு ப்ரைன் ஹெமரேஜ். இரத்தம் மூளையில் கட்டியாகி விட்டிருந்தது, மருத்துவமனையில் ICU வில் வைத்துப் பார்க்கலாம், ஆனால் காப்பாற்ற முடியும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்று டாக்டர் கூறி விடவே அம்மாவை வீட்டிற்குத் திருப்பிக் கொண்டுவந்து விட்டார்கள்.




பாதி உயிராக பெட்டில் அமலாவின் அம்மாவைப் பார்த்த போது Flash Cut போல் அவருடன் பகிர்ந்து கொண்ட பல நினைவலைகள் வசீகரனின் மனத் திரையில் வந்து போயின.

அமலா அவனைப் பார்த்ததும் வாய் பொத்தி அழுதாள்.

வீடு முழுவதும் உறவினர்கள், அவரவருக்குப் பிடித்த விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அமலாவிடம் பேசுவதற்குக் கூட அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை.

ஆனால், வந்திருந்த வாரிசுகள், அம்மாவின் கட்டிலைச் சுற்றி நாற்காலி போட்டு அமர்ந்து புளூ சட்டை மாறனைப் போல் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தங்கள் அம்மாவின் வாழ்க்கையை விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். விமர்சித்தவர்கள் எவரும், தங்களை சுய விமர்சனம் செய்து கொண்டதாகத் தெரியவில்லை.

அப்பாவின் மறைவுக்கும் இப்படித்தான். அவர் மயக்கமான நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போது அவரை அம்மா உட்பட எல்லோரும் விமர்சித்துக் கொண்டுதானிருந்தார்கள்.

அவர் மயக்க நிலையில் இருந்தாலும் அவர்கள் தன்னைக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பது அவருக்குக் கேட்டுக் கொண்டிருந்தால் அவர் மனசு என்ன பாடுபடும்.? அன்பு, பாசம், உறவு என்பதெல்லாம் வெறும் பணத்திலும், சொத்திலும் தானா? பாவம் அந்த உயிர் எப்படித் துடித்துப் போகும்?

அறிவியல் கூற்றுப்படி இறந்ததற்குப் பின்னும் கூட நான்கைந்து நிமிடங்கள் நம்மைச் சுற்றி நடப்பதைக் கேட்க, முடியுமாம்! அப்படியென்றால் இவர்கள் விமர்சனம் அவர்களை என்ன பாடு படுத்திவிடும்? அம்மாவுக்கு ப்ரைன் ஹெமரேஜ் என்பதால் கேட்பதற்கு வாய்ப்பில்லை என்பதில் ஓரளவு மனசு சமாதானமடைந்திருந்தது அமலாவுக்கு. என்றாலும், அவளை வேறு எதுவோ தீவிரமாக அலட்டிக் கொண்டிருந்தது.

அமலா அம்மாவின் இரண்டாவது மகள். மூன்றாவது மகள் இன்னும் வந்து சேரவில்லை. பூனாவில் இருந்த அவள் விமானத்தில் தன் கணவனுடனும், மகனுடனும் வந்து கொண்டிருந்தாள்.

அமலா கும்பலின் இடையில் இருந்தாலும் அடிக்கடி தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டு அழுதாள். ஏதோ ஒரு விஷயம் அவளை அதிகமாக பாதித்திருந்தது. அவள் வசீகரனிடம் எதையும் பகிர்ந்து கொள்ளவில்லை. குற்ற உணர்வில் தவிப்பவள் போலத் தெரிந்தாள். அம்மாவின் இந்த நிலைக்கும் அவளுக்கும் ஏதோ ஒருவித தொடர்பு இருக்க வேண்டும் எனத் தோன்றியது அவள் நடவடிக்கை.

திடீரென்று பிறிட்டு வெளிப்பட்ட அழுகுரல், மூன்றாமவள் வந்து விட்டாள் என்பதை அறிவித்தது!

அமலா தன் தங்கையை ஆறுதலாய் அணைத்துக் கொண்டாள். சிறிது நேரத்தில் வந்த மூன்றாமவளும் சமாதானமடைந்தாள்.

மூத்தவன் தன் விமர்சனத்தை மீண்டும் முன் வைத்தான். பெண்களுக்கு நல்ல இடத்தையெல்லாம் பிரித்து எழுதி வைத்து விட்டு அம்மா தனக்கு மட்டும் குளத்தின் பாகத்தை தந்து தன்னை ஏமாற்றிவிட்டதாகப் புலம்பினான். அவன் வாயிலிருந்து லேசான சாராய வாடை வெளிப்பட்டதால் யாரும் அவனிடம் பேச்சுக்

கொடுக்கவில்லை. சொத்து விஷயத்தில் எல்லோருக்குமே ஒருவித அதிருப்த்தியிருந்தது.

அமலா மோர் கொண்டு வந்து கொடுத்தபோது அவளை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்து விட்டு வாங்கிக் குடித்தான் அவள் சகோதரன்.

எல்லோருக்கும் வேண்டியது அம்மாவின் சொத்து, பணம் மற்றும் அம்மாவின் நகைகள். அமலாவைத் தவிர எல்லோருடைய உரையாடல்களிலும் அது மட்டும் தான் வெளிப்பட்டது.

அன்று இரவு எல்லோரும் உறங்குவதற்காக செட்டில் ஆகி நீண்ட நேரம் ஆன பின்னும் அமலா, தன் அம்மாவின் முகத்தைப் பார்த்தபடியே வெறுமையாய் அமர்ந்திருந்தாள்.

அம்மாவுக்கு இப்போதும் ஹார்ட் பீட் நார்மலாகத்தான் இருந்தது. இந்த நிலையில் இது இப்படியே எவ்வளவு நாள் நீளும் எனக் கணிக்க முடியவில்லை.

மாலையில் அம்மாவைப் பரிசோதித்த குடும்ப டாக்டர் மிதுன், மீறிப் போனால் இரண்டு நாள் என கெடு விதித்துச் சென்றிருந்ததில் சகலருக்கும் சற்று ஆசுவாசம் தோன்றியிருந்தது.

அமலா, இடையிடையே எழுந்து சென்று அம்மாவைத் தொட்டுப் பார்த்து விட்டு வந்து படுத்துக் கொண்டாள்.

இரவு விளக்கின் ஒளியில் அமலா தங்கம் போல ஜொலித்தாள். அமலாவைப் பார்க்காமல் மூன்று மாதங்களாய் தேக்கி வைத்திருந்த உணர்ச்சி வசீகரனை அலைக்கழித்தது.

அமலா என்ன மனநிலையில் இருக்கிறாள் என்பதைப் பற்றி எதையும் சிந்திக்காமலே ஆவேசமாய் அவளைத் தன் பக்கம் இழுத்து அணைத்தான். அவள் ஒரு ஜடம் போல அவன் ஆசைக்கு அடங்கிப் போனாள்.

அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் கூட வசீகரனின் காமத்தீயில் ஆவியாகிப் போனது.

சிறிது நேரத்தில் வசீகரன் உறங்கிப் போனான்.



அமலா மட்டும் சுழலும் ஃபேனைப் வெறுமையாய் பார்த்தபடிக் கிடந்தாள்.

வசீகரன் கூடப் பெண்ணியம் பேசுகிற ஆள்தான். ஆனால், தனக்கு எல்லாம் தெரியும் என்கிற மமதை அவனிடம் எப்போதுமே மேலோங்கியிருக்கும். மற்ற இயக்குநர்களின் படங்களைக் கூடப் பார்க்க மாட்டான். அப்படியே பார்த்தாலும் அது சிறப்பாயிருந்தது என அவன் மனம் ஒத்துக் கொள்ளாது. எப்போதும் தான் எழுதிப் படமாக்கப்படாமலிருக்கும் படைப்புகள் பற்றியே எல்லோரிடமும் பெருமிதமாகப் பேசிப் புழகாங்கிதமடைவான்.

அமலா கூட நன்றாக எழுதக்கூடிய ஆற்றல் மிக்கவள்தான். நிறைய படிப்பவளும் கூட. அவள் சிறுகதைகள், கவிதைகள் அவ்வப்போது சிறு பத்திரிக்கைகளில் வெளியாகும். அவற்றை வசீகரன் அபூர்வமாய் படித்தாலும், ஒரு முறை கூட அவளைப் பாராட்டியதே இல்லை. நண்பர்களிடம் அவளை அறிமுகப்படுத்தும் போது கூட அவளை ஹவுஸ் வைஃப் என்று மட்டும் தான் குறிப்பிடுவான். அவளிடம் தான் எழுதிய கதைகளைச் சொல்லும் போது கூட அவள் சொல்லும் ஐடியாக்களை ஏற்றுக் கொள்ள அவன் ஈகோ அவனை அனுமதிக்காது.

ஆனால், அமலா எழுதுவதை மட்டும் நிறுத்தவில்லை! எழுதிக் குவித்துக் கொண்டேயிருந்தாள்.

கடந்த மூன்று மாதமாய் தான் அதற்கு ஒரு வடிகால் கிடைத்தது! அவள் முகநூலில் தன்னை இணைத்துக் கொண்டு அதில் ஓவியா என்கிற புனைப் பெயரில் தன் கவிதைகளை வெளியிட்டாள். அதற்கு பல நல்ல கமெண்ட்ஸ்களும் கிடைத்தன. நிறைய நண்பர்களும் கிடைத்தார்கள். அது அவளுக்குப் பெரும் ஆறுதலாயிருந்தது.

சமீபகாலமாய் கவினிடமிருந்து அமலாவுக்கு அவள் கவிதைகளை மிக நுட்பமாக உள்வாங்கிய கமெண்ட்கள் வந்தன. கவின் கவிதைகளை அணுகும் விதமே அவள் மனதைத் தொட்டது. கவினின் ரசனை

இதயத்தை மயிலிறகால் வருடிவிட்டது போலிருந்தது. கவினிடம் நிறைய உரையாட வேண்டும் போல இருந்தது.

முகநூல் மெசஞ்சரில் பேச ஆரம்பித்தாள். கவினைப் பற்றிய எந்தத் தகவலையும் அவள் தெரிந்து கொள்ள முற்படவில்லை. கவினும் தான் யார் என்று தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளவில்லை. வெளிப்படுத்திக் கொண்ட பெயர் முதல் புகைப்படம் வரை எல்லாமே ஃபேக் (Fake). கவினும் அப்படித்தான் இருக்க வேண்டும். அவர்கள் முகநூல் உரையாடல் இரவு வெகுநேரம் வரை நீண்டது.

ஒருவர் மனதை நெருங்க பெரிய அளவு கால இடைவெளி ஒன்றும் தேவையில்லை சில மணி நேரங்களே போதும் என்று அமலாவுக்குத் தோன்றியது. கணவன் மனைவி, குடும்ப உறவுகள், சுற்றம் என்பதெல்லாம் காதலுக்கு ஒரு தடையாய் இருக்க முடியாது என்பதைக் காதல்தான் அவளுக்கு உணர்த்தியது.

வழக்கத்திற்கு மாறாக தன் மகள் அமலா உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் மாறிக் கொண்டிருப்பதையும், இரவு வெகுநேரம் வரை அவள் யாருடனோ ஃபோனில் Chating நடத்திக் கொண்டிருப்பதையும் அவள் அம்மா பவித்ரா கவனித்துக் கொண்டிருந்தாள். மகள் யாரிடமோ காதல் வயப்பட்டிருக்கிறாளோ? என்கிற சந்தேகம் அவள் BP யை அடிக்கடி உயர்த்திக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இரவு அமலா தன் மடியில் ஏகாந்தமாய் படுத்திருக்க அம்மா அவள் தலைமுடியைக் கோதியபடியே கேட்டாள்.

நீ யாரையாவது லவ் பண்றியாம்மா?

அமலா அம்மாவின் முதல் கேள்வியிலேயே உறைந்து போனாள்.

நீண்ட நேரம் மௌனமாயிருந்தாள்.

அவள் விழிகள் கண்ணீரால் நிறைந்தன.

'ம்' என்றாள்.

அம்மா உறைந்து போனாள்.

அதன் பின் இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

அம்மாவின் டென்ஷன் நாளுக்கு நாள் கூடிக் கொண்டிருந்தது.

திடீரென்று ஒருநாள் கவினிடமிருந்து அமலாவுக்கு ஒரு Call வந்தது.

அமலா குளித்துக் கொண்டிருந்தாள்! அம்மா, அமலாவின் மொபைலைப் பார்த்தாள்.

கவின் Calling என மானிட்டர் காட்டியது. அம்மா ஃபோனை ON செய்து 'ம்' என்று மட்டும் சொன்னாள்.

எதிர்முனையிலிருந்து வந்த செய்தி அம்மாவை மயக்கமுற்று விழச் செய்தது.

குளித்துவிட்டு வந்த அமலா, அம்மா மயக்கமாய் விழுந்து கிடந்ததையும் அருகில் தன் மொபைலையும் பார்த்தாள். அவளுக்கு சர்வமும் விளங்கி விட்டது.

பரபரப்போடு phone செய்து ஆம்புலன்சை வர வழைத்தாள். மருத்துவமனையில் அம்மாவை அட்மிட் செய்து விட்டுத் தன் கணவன் வசீகரனுக்கு phone செய்தாள். அவனும் இப்போது வந்து சேர்ந்து விட்டான். இனி தொலைவில் இருந்து வரக் கூடிய உறவினர்கள் என்று யாருமில்லை.

டாக்டர் கொடுத்த இரண்டு நாள் கெடு முடிந்த பின்னும் அம்மாவின் இதயம் துடிப்பதை நிறுத்தவில்லை.

கவினிடமிருந்து மீண்டும் phone வந்தது. அவள் எடுத்து மானிட்டரைப் பார்த்தாள். மீண்டும் அந்த இனிய குரலைக் கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது. எச்சரித்தது. அச்சுறுத்தியது.

ஃபோன் அதுவாகவே கட் ஆகும் வரை எடுக்காமலிருந்த அமலா, கவினின் பெயரைத் தன் மொபைலில் Block செய்தாள்.

அன்று இரவு அம்மாவுக்கு மூச்சிறைப்பும், ஹார்ட் பீட்டும் அதிகமானது. அடுத்த நாள் காலை வரை அருகே இருந்து அம்மாவைப் பார்த்துக் கொண்டாள் அமலா. சரியாய் 4.15 அதிகாலை அம்மா தன் கடைசி மூச்சை நிறுத்தினாள்.

அம்மாவின் உடல் சகல சம்பிரதாயங்களுக்குப் பின் மின் தகனம் செய்யப்பட்டது. உறவினர்கள் பலரும் விடைபெற்றுக் கொண்டார்கள். காலம் முன்பு போல் இல்லை. எல்லோரும் நெருப்பின் மீது நடப்பதைப் போல எல்லாவற்றையும் துரிதப்படுத்திக் கிளம்பினார்கள்.

மூன்றாம் நாள் அஸ்தியைக் கடலில் கரைத்து விட்டு வந்ததும், வசீகரன் சென்னை செல்ல சூட்கேஸில் தன் உடைகளை அடுக்கிக் கொண்டிருந்தான். 6.58 க்கு ட்ரைன். அதற்கு இன்னும் இரண்டு மணி நேரமிருந்தது.

அமலா சூடான காப்பியை எடுத்து வந்தாள். கடந்த மூன்று நாட்களிலும் அவள் மிகவும் வாடிப் போயிருந்தாள். அதிகம் பேசவில்லை.

வசீகரன் காப்பியை வாங்கிக் குடிக்க ஆரம்பித்ததும் அமலா, 'உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும்.' என்றாள்.

அவன் குழப்பமாகப் பார்த்தான்.

'என் அம்மா இறந்ததற்கு நான்தான் காரணம்.' என்றாள்.

வசீகரனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

பதட்டத்தோடு 'என்ன சொல்றே?' என்றான்.

அவள் நடந்ததைச் சொன்ன போது அவன் ரத்தம் கொதித்தது.

சிறிது நேரம் எந்த பதிலும் சொல்ல முடியாமல் தன் கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு,

'இப்ப நீ என்ன சொல்ல வர்றே?' என்றான்.

அமலா நிதானமாக,

'பெண்ணியம் பேசற உங்களுக்குப் புரிஞ்சிருக்குமே. House wife ன்னா என்னண்ணு தெரியுமா? சம்பளம் வாங்காத ஒரு கொத்தடிமை. ஒரு அடிமை என்ன கேக்கப் போறா? சுதந்திரம் தான்.'

வசீகரன் அதிர்ச்சியுடன்,

'இதுக்குப் பேர் சுதந்திரமில்லை. அரிப்பு. உன் தான்தோன்றித்தனத்துக்கு நீ கேக்கற லைசன்ஸ்.'



ஒரு படத்தெ முழுசாப் பாக்காமெயே விமர்சிக்கிற ஆள்தானே நீங்க! உங்களுக்கு அப்படித்தான் தெரியும். நான் யார்? எனக்கு என்ன பிடிக்கும்? என்ன பிடிக்காது? என்ன வேணும்? எது வேண்டாம்னு தெரியுமா? ஒரு பொண்ணேட உணர்வுகளெ மதிக்காத காமம் தெரிஞ்ச உங்களுக்குக் காதல் தெரியுமா? சரி அந்தக் காமமாவது முழுசா தெரியுமா? G Spot ?'

வசீகரன் அதிர்ந்து போய் கட்டிலில் அமர்ந்தான்.

'ஸாரி, நான் உங்கள மட்டும் குற்றப்படுத்தலெ. நிறைய பேர் அப்படித்தான் இருக்காங்க. ப்ளீஸ், ஒரு நல்ல படம் பண்ண மனித அக உணர்வுகளப் புரிஞ்சிருக்கணும், அவங்க உணர்ச்சிகளப் புரிஞ்சிருக்கணும். உலக அரசியல் தெரிஞ்சிருக்கணும். உங்க அனுபவமும், அதில நீங்க கத்துகிட்ட பாடமும் மட்டுமே வாழ்க்கையாயிறாது. உலகம் பெருசு.'

வசீகரன் உறைந்து போனான். அவள் அருகில் வந்து அவன் தலையை அன்பாய் கோதிவிட்டு, 'நிச்சயமா நம்ம பிரிவு ஒரு நல்ல படத்த எடுக்க உங்களுக்கு உதவும். All the Best.' என்றவள் அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.

அடுத்த வாரத்தில் அவன் பட அலுவலுக்கிடையில் மியூட்சுவல் டைவர்ஸ் கேட்டு அமலா அனுப்பியிருந்த வக்கீல் நோட்டீஸ் வந்தது.

அவன், 'தான் இன்னும் தெரிந்து கொள்ள எவ்வளவோ அனுபவங்கள் காத்திருக்கின்றன.' எனப் புரிந்து கொண்டு அந்த மியூட்சுவல் டைவர்ஸ் பேப்பர்களில் கையெழுத்துப் போட்டான்.

அமலாவின் தீட்சண்யமான முகம் அவன் நினைவில் வந்து போயிற்று.

அமலா தன் மொபைலில் கவினின் நம்பரை un block செய்தாள்.

ஒரு காஃபி ஷாப்பில் மாலை சந்திக்கலாம் என்று கவின் ஃபோன் செய்ய அந்தக் குரலைக் கேட்டதும் கவினை அவளுக்குப் பார்க்க வேண்டும் போலிருந்தது. கண்ணாடி முன் நின்று தன் அழகை சற்றே மெருகூட்டிக் கொண்டு ஒரு CAB ஐ Book செய்து கிளம்பினாள்.

பரபரப்பில்லாத அந்த காபி ஷாப்புக்குள் நுழைந்ததும் அவள் பார்வை கவினைத் தேடியது. இருவரும் நேருக்கு நேராகப் பார்த்துப் புன்னகைக்க, அமலா கவினின் எதிரில் வந்து அமர்ந்து அவளோடு கைகுலுக்கிக் கொண்டாள்.

கவினிடமிருந்து மிதந்து வந்த பெண்களுக்கே உரிய அந்த பெர்ஃபியூம் வாசனையில் தவிர்க்க இயலா வண்ணம் மரணத்தின் நெடியும் கலந்திருந்ததை அமலாவால் உணர முடிந்தது.

# உயிரி மருத்துவக் கழிவு நச்சு ஆலையை எதிர்த்து பிசானத்தூர் மக்களின் வெற்றி! புதுக்கோட்டை மாவட்டநிர்வாகம் பணிந்தது!

பாரி (எ) ச.குபேந்திரன்
தமிழ்த் தேச இறையாண்மை

பன்நாடுகளின் குப்பைத் தொட்டி இந்தியா என்றால், இந்தியாவின் குப்பைத் தொட்டி தமிழ்நாடு! காரணம் தமிழ்நாட்டின் கங்காணி ஆட்சியாளர்களும், அரசு அதிகாரிகளும் மக்களை, மண்ணை, சுற்றுச்சூழலைப் பற்றி எவ்வித அக்கறையுமின்றி தங்களது பணப்பையை நிரப்புவதை நோக்கமாகக் கொண்டே செயல்படுகின்றனர். இவர்களுக்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளும் அவர்களது கூட்டணி துண்டு துக்காணி கட்சிகளும் உடந்தையாகும்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், பிசானத்தூரில் உயிரி மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நச்சு ஆலையை பயோடெக் இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ் நிறுவ திட்டமிட்டு இருந்தது. அதற்கான பொதுமக்கள் கருத்து கேட்டு கூட்டம் 09.10.2025 அன்று நடைபெறும் என்ற தகவல் தோழர் சி.அ. மணிகண்டன் (தமிழர் கழகம்) மூலமாக செப்டம்பர் நடுவாக்கில் அறிந்தேன். அதற்கான பணியில் 19.09.2025லிருந்து, இப்போராட்டம் வெற்றி அடைந்த 2025 டிசம்பர் 13ஆம் தேதி வரை விடாமுயற்சியுடன் ஈடுபட்டேன், ஈடுபட்டோம்.




இந்த நச்சு ஆலைக்கு எதிரான போராட்டம் பல்வேறு தடைகளுக்கிடையே மூன்று கட்டங்களின் ஊடாக முன்னேறியது. முதல் கட்டத்தில் ஆலை நிர்வாகமும், அரசியல் கட்சியினரும் போராட்டக் குழுவினரின் நம்பிக்கை மீதான அவதூறுகளைப் பரப்பி, பொதுமக்களை கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வரவிடாமல் செய்வதற்கு செய்த முயற்சியையும், இரண்டாவது கூட்டத்தில் தொடர் காத்திருப்புப் போராட்டக் களத்தில் இருந்த பொதுமக்களில் ஒரு பிரிவினரை (குறிப்பாக ஆண்களை) நாடாளுமன்ற உறுப்பினரின் உறுதி மொழியை ஏற்று போராட்டக் களத்தில் இருந்து விலக்கியதையும், மூன்றாவது கட்டத்தில், போராட்டக் குழுவினரிடையே இரு பிரிவுகள் தோன்றி, ஒரு பிரிவு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு எதிராகவும், மற்றொரு பிரிவு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு வழிகாட்டி, போராட்டத்தை வெற்றிக்கு கொண்டு வந்த நிகழ்வுகளும் நடந்தன. இம்மூன்று கட்டத்திலும் போராட்டத்தின் ஒற்றுமையைக் குலைக்க, அதன் வெற்றிப் பயணத்தைத் தடுக்க, போராட்டத்திற்கு வெளியிலிருந்தும், போராட்டக் குழுவிலிருந்தும் எழுந்த முரண்பாடுகளை சரியாக கையாண்டு, போராட்டமானது வெற்றியை நோக்கி முன்னேறியுள்ளது. போராட்டக் களத்திற்கு வெளியில் இருந்தும் உள்ளிருந்தும் எழுந்த கடுமையான முரண்பாடுகளை கையாண்டதில் எனது அணுகுமுறை என்பது போராட்ட நலன்களை பாதுகாப்பது, உயர்த்துவது என்பதாக மட்டுமே இருந்தது. தனிப்பட்டவர்களின் நலன்களை, உணர்வுகளை புறக்கணித்தேன். ஆகையினால் தொடக்கத்தில் இருந்து கடைசி வரை சிலரால் விமர்சிக்கப்பட்டேன். அந்த சிலரின் விமர்சனங்களுக்கு அஞ்சி பின்வாங்கி இருந்தேன் என்றால் 13.12.2025-ல் வட்டாட்சியரின் எழுத்துப்பூர்வ ஆணை ஆலைக்கு எதிராக போராட்ட களத்தில் மக்களின் முன்னிலையில் வாங்க இயலாது போயிருக்கும்.

**முதலாவது கட்டம் (19.9.2025 முதல் - 09.10.2025) வரை)**

தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியில் இதே போன்ற ஆலை நிறுவப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் கல்லாக்கோட்டையில் கால்ஸ் சாராய ஆலை நிறுவப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் இரண்டு ஆலைகளுக்கு எதிரான போராட்டத்தை அப்பகுதியில் உள்ள அரசியல் கட்சியினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் திரண்டு நடத்தியுள்ளனர். இப்போராட்டத்தில் அரசியல் கட்சியினர் மற்றும் போலி சமூக ஆர்வலர்கள் பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டு போராட்டத்தை கைவிட்டுள்ளனர். இவ்விரண்டு போராட்டங்களில் அனுபவங்களை தொகுத்து கொண்டு பிசானத்தூர் போராட்டத்தை வெற்றியை நோக்கி பொதுமக்களை இறுதிவரை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை கணக்கில் கொண்டு ஆலையின் தீமைகளை விளக்கி துண்டறிக்கை போட்டோம். துண்டறிக்கையை சுற்றுப்புற கிராமங்களில் பரப்பவும், போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் போராட்டக் குழுவை அமைத்தோம். போராட்டக் குழுவில் எழக்கூடிய முரண்பாடுகளை ஜனநாயகம், ஜனநாயக மத்தியத்துவ கொள்கைகளின் அடிப்படையில் தீர்த்துக் கொள்வது என முடிவு செய்து போராட்டத்தை திட்டமிட்டபடி தொடங்கினோம்.

2025 செப்டம்பர் 19 முதல் அக்டோபர் 8 வரை பிசானத்தூரிலும் அதனைச் சுற்றி உள்ள கிராமங்களிலும் பிசானத்தூர் உயிரி மருத்துவக் கழிவு ஆலையை எதிர்த்து கூட்டமைப்பு சார்பில் பெருமளவில் பரப்புரை செய்தோம். இதன் பயனாய் 08.10.2025 அன்று கந்தர்வகோட்டையில் நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சுமார் 700க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அதன் விளைவாக 09.10.2025 அன்று கந்தகோட்டையில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கருத்துக் கேட்புக் கூட்டத்தில் 100 விழுக்காடு மக்கள் ஆலை வேண்டாம் என்று கருத்து கூறினர். கருத்து கேட்புக் கூட்டம் ஆலைக்கு எதிராக வெற்றிகரமாக முடிந்தது. இக்கூட்டத்தில் சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், வணிக சங்கங்கள், ஆளும், எதிர்க் கட்சியினர், சிறு, குறு அமைப்பினர் கலந்து கொண்டனர். ஆலைக்கு ஆதரவாக கருத்துக் கூற அழைத்து வரப்பட்டவர்கள் கூட வாய் மூடினார்கள். சிலர் ஆலைக்கு எதிராக கருத்துக் கூறினர்.

**இரண்டாவது கூட்டம் (10.10.2025 முதல் 04.12.2025 வரை)**

பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் 100 விழுக்காடு மக்கள் ஆலை வேண்டாம் என கருத்து தெரிவித்தாலே ஆலை வராது என்பதல்ல. கருத்து கேட்புக் கூட்டம் என்பது மக்களை அழிக்கும் ஒரு சடங்காக அரசு நடத்துகிறது என்பதை அறிந்து ஆலை வராது என அரசு எழுத்து வடிவில் அறிவிக்கும் வரை தொடர் காத்திருப்புப் போராட்டம் நடத்துவது என முடிவு செய்து, 2025 அக்டோபர் 25ஆம் நாள் தொடர் காத்திருப்பு போராட்டத்தைத் தொடங்கினோம். இப்போராட்டத்தைத் தடுப்பதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி என கூட்டாக சேர்ந்து போராட்டக் குழுவில் இடம் பெற்றோர் பணத்தைப் பெற்றுக்கொண்டு போராட்டத்தைக் கைவிட்டு விடுவர். குறிப்பாக சீ.அ. மணிகண்டனும், பாரி (எ) குபேந்திரனும் பணத்தைப் பெற்றுக் கொண்டு போராட்டத்தை கைவிட்டு விடுவர் எனவும், அவ்விருவரையும் நம்ப வேண்டாம் எனவும் பிரச்சாரம் செய்தனர். இதனையும் மீறி மக்கள் தயக்கத்துடன் முதல் நாள் போராட்டத்தில் பங்கேற்றனர். போராட்டத்தை தோழர் கி.வே. வெங்கட்ராமன், (தமிழ் தேசிய பேரியக்கம்), தோழர் அரங்க. குணசேகரன் (தமிழக மக்கள் புரட்சி கழகம்) ஆகிய இருவரும் தொடங்கி வைத்தனர். இப்போராட்டம் மெதுவாக அடுத்தடுத்து எழுச்சி பெற்றது. பிசானத்தூர் சுற்றுப்புற கிராம மக்களும் பல்வேறு அரசியல் கட்சியினரும், சமூக ஆர்வலர்களும் தமிழகம் முழுவதிலிருந்தும் போராட்க் களத்திற்கு வந்து ஆதரவு நல்கினர். புதுக்கோட்டையில் இருந்து அனைத்து அரசியல் கட்சியினரையும் ஒருங்கிணைத்து போராட்டக் களத்திற்கு வாகன பேரணியை போராட்டக் குழு நடத்திக் காட்டியது. இப் போராட்டத்திற்கு ஆதரவாக கந்தர்வகோட்டையில் உள்ள அனைத்து வணிக சங்கங்களும், ஆட்டோ சங்கங்களும், தரைக்கடை சங்கங்களும், கட்சி வேறுபாடின்றி ஒரு நாள் முழுக் கடையடைப்பு நடத்தின. நூறு விழுக்காடு கடையடைப்பு போராட்டம் முழு நாள் நடைபெற்றது. கந்தர்வகோட்டை வரலாற்றிலேயே இப்படி ஒரு கடையடைப்புப் போராட்டம் நடந்ததில்லை என மக்களே தங்களுக்குள் பேசிக் கொண்டனர். போராட்டக் களத்தின் ஒரு கட்டத்தில் நாளடைவில் பெண்களே போராட்டத்தை ஒருங்கிணைத்து

வழிநடத்தினர். அவர்களுக்கே உரிய முறையில் ஆலைக்கு எதிராக பொங்கல் வைத்தல், கும்மி அடித்தல், கோலமிடுதல், பாட்டு பாடுதல், கலை நிகழ்ச்சிகள், ஓவிய காட்சிகள், பேச்சுப் போட்டிகள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு படம் ஓட்டுதல், முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு எதிராக கருப்புக் கொடி கட்டுதல் போன்ற போராட்டங்களை ஒருங்கிணைத்து அறவழியில் போராடினர். போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் வரக்கூடிய கருத்து முரண்களை தங்களுடைய பேசி ஜனநாயக முறையில் தீர்த்தனர். இப்போராட்டத்தில் ஆண்களும் பெண்களும் தங்களுடைய வேலையை பிரிவினை செய்து கொண்டனர்.

11.10.2025, 02.11.2025 ஆகிய இரண்டு நாட்களில் நடந்த கிராம சபை கூட்டத்தில் ஆலை வேண்டாம் என பிசானத்தூரிலும், சுற்றுப்புற கிராமங்களிலும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ 2025 நவம்பர் 22 அன்று போராட்டக் களத்திற்கு வந்து இந்த ஆலை வராமல் தடுப்பதற்கான அனைத்து வேலைகளையும் செய்வதாக உறுதி கூறினார். கூறியதுடன் இல்லாமல் மாவட்ட ஆட்சியரை சந்தித்து விட்டு மக்களின் கோரிக்கையை ஏற்று அந்த ஆலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) நிறுவ இசைவு அளிக்காது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு உறுதி அளித்ததாக




2025 நவம்பர் 30 அன்று துரை வைகோ அறிவித்தார். இவர் அறிவித்த நாளிலிருந்து போராட்டத்தை கைவிட்டு செல்வதற்கான முயற்சிகள் ஆளுங்கட்சி தரப்பிலிருந்தும், அதிமுக ஒன்றிய செயலாளர் செ. வைரமூர்த்தி மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி 2025 டிசம்பர் 4ஆம் தேதி இரவு ஊர்க்காரர்கள் (ஆண்கள்) கூடிப் பேசி போராட்டத்தை கைவிடுவதாகவும், போராட்டக் களத்தில் பாரி (எ) குபேந்திரனை பேச விடக்கூடாது என்றும் முடிவெடுத்தனர். போராட்டத்திற்கு மக்களின் ஆதரவு இல்லை என்பதால் போராட்டத்தை கைவிட வேண்டும் என போராட்டக் குழுவில் உள்ள மற்றொரு பிரிவினர் கூறினர். இவ்விரண்டு பிரிவினருக்கும் இடையில் மாவட்ட ஆட்சியரிடமிருந்து எழுத்துப்பூர்வமான ஆணை வாங்காமல் போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்றும், போராட்டத்தைத் தொடங்கிய நாம் தான் போராட்டத்தை முடிக்க வேண்டும் என்றும் போராட்டக் குழுவில் ஒரு பிரிவு (தோழர்கள் பாரி (எ) குபேந்திரன், செ. அருண்குமார் – கம்யூனிஸ்ட் கட்சி (மா–லெ) மக்கள் விடுதலை, பார்வேந்தன் – வி.சி.க.) உறுதியாக வாதிட்டது. ஆகவே, போராட்டக் குழு இரண்டாக உடைந்தது. 05.12.2025 அன்று தோழர் சீ.அ. மணிகண்டன் இரு பிரிவுகளுக்கு இடையில் சமாதானப் பேச்சு நடத்தி போராட்டத்தை தொடர்வது என முடிவெடுத்தாலும் கூட, அடுத்தடுத்து நடந்த நிகழ்ச்சிகள் பிரிவு தவிர்க்க இயலாதது என்பதை உறுதிப்படுத்தியது. 5ம் தேதிக்கு பிறகு தோழர் சீ.அ. மணிகண்டன் சொந்த வேலையின் காரணமாக போராட்டக் களத்திற்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**மூன்றாவது கட்டம் (05.12.2025 முதல் 13.12.2025 வரை)**

முதல் மற்றும் இரண்டு கட்டங்களில் நடந்த போராட்டத்தில் போராட்டக் குழுவும், மக்களும் இணைந்து ஒற்றுமையுடன் செயல்பட்டனர். இந்த ஒற்றுமையை சிதைப்பதற்கு ஆளும் மற்றும் எதிர் கட்சியினர் இவர்களுடன் (கந்தர்வகோட்டை பகுதி அளவில்) அரசும் கூட்டாச் சேர்ந்து தொடர்ந்து முயற்சி செய்து வந்தனர். இவர்களது முயற்சி மக்களின் போராட்ட ஒற்றுமையால் தவிடுபொடியாக்கப்பட்டது. தற்போது போராட்டக் குழுவில் ஏற்பட்ட பிளவில் ஒரு பிரிவு இந்த ஒற்றுமையை சிதைப்பவர்களுக்கு மறைமுக ஆதரவாக அமைந்தது. எப்படி என்றால்,




நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குறுதியை நம்பி பொதுமக்களின் ஒரு பிரிவு போராட்டத்தை கைவிட்டதென்றால், போராட்டத்திற்கு மக்களின் ஆதரவு இல்லை, எனவே போராட்டத்தை கைவிட வேண்டும் என போராட்டக் குழுவில் ஒரு பிரிவு வாதிட்டது. இரு பிரிவினரும் கூறிய காரணங்கள் வேறுவேறாக இருந்தாலும் இருவரது முடிவும் போராட்டத்தைத் தொடரக் கூடாது என்பதே! 5ம் தேதி சமூக ஊடகங்கள் பிசானத்தூர் போராட்டம் முடிந்து விட்டதாக செய்தி வெளியிட்டன. பொதுமக்களில் ஒரு பிரிவினர் குழம்பிப் போயினர். குறிப்பாக பெண்கள் அடுத்தடுத்து என்ன செய்வது என்று தடுமாறி நின்றனர். போராட்டமானது கடலில் தத்தளித்த கப்பல் போல தலைமையின்றித் தடுமாறியது. இந்நிலையை சரியாக புரிந்து கொண்டு உள்ளூர் அளவில் திரு.ரெ. அடைக்கலம் மூலம் மீண்டும் போராட்டம் புத்தெழுச்சி பெற்றது. எவ்வளவு ஆண்டுகள் போராடினாலும் அரசு தரப்பில் இருந்து எழுத்துப்பூர்வமான உத்தரவு வராது என கிண்டல் அடித்தவர்களுக்கு பதில் சொல்லும் வகையில் 13.12.2025 அன்று கந்தர்வகோட்டை வட்டாட்சியர் தனது அதிகார வர்க்கம் படைச்சூழ போலீஸ் படையுடன் போராட்டக் களத்திற்கே வந்து எழுத்துப்பூர்வ ஆணையை மக்களிடம் கொடுத்தார். 25.10.2025 இல் தொடங்கிய தொடர் காத்திருப்புப் போராட்டம் 50 வது நாளில் கந்தர்வகோட்டை வட்டாட்சியரின் ந.க.எண். 3538/2025, ஆ4/நாள் 13.11.2025இல் எழுதி கோட்டாட்சியருக்கு அனுப்பியதை போராட்டக் குழுவில் ஒரு பிரிவினரும் பொதுமக்களும் ஏற்று போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்தோம். அந்த ஆணையில் “ஆலை அமைவிடத்திற்கு அருகில் 372 மீட்டரில் மனை இடங்கள் உள்ளது எனத் தெரிவித்து பொதுமக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதால் சுத்திகரிப்பு ஆலை அமைய அனுமதி அளிக்க மறுப்பு தெரிவித்து அரசு அறிக்கை அனுப்பலாம் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று இருந்தது. இந்த ஆணையை ஏற்காத போராட்ட குழுவில் உள்ள மற்றொரு பிரிவின் குளறுபடியால் கைதானோம். பிறகு உண்மையை உணர்ந்து ஆலை வரும் என்ற முகாந்திரம் வந்தால் கூட மீண்டும் போராட்டத்தை தொடர்வோம் என காவல்துறைக்கும் மாவட்ட நிர்வாகத்துக்கும் எழுதிக் கொடுத்துவிட்டு விடுதலை ஆனோம். போராட்டக் குழுவிலிருந்த மற்றொரு பிரிவினர் 30 பேரில் 6 பேர் மட்டும் தாங்கள் போராட்டத்தை தொடர்வதாகக் கூறிவிட்டு வந்தனர். அவர்கள் இன்று வரை போராட்டத்தைத் தொடரவில்லை. பிசானத்தூர் மக்களின் 50 நாளைய தொடர் காத்திருப்பு போராட்டம் தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். காரணம், இந்தப்போராட்டத்தை பெரிய கட்சிகள் நடத்தவில்லை என்பதுடன் பெரிய கட்சிகள் ஆதரவு கூடத் தரவில்லை. சமூக ஊடகங்கள் போராட்ட செய்தியை மறைத்தன. பல்வேறு இடையூறுகளுக்கு இடையே மாறுபட்ட கொள்கைகளை கொண்ட சிறிய அமைப்புகள் மக்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் ஆர்வலர் முகிலனின் வழிகாட்டலில் இந்த போராட்டத்தை வெற்றியை நோக்கி இட்டுச் சென்றுள்ளன. இந்த வெற்றிக்கு பல காரணங்கள் இருந்த போதும், போராட்டக் களத்தில் இருந்தவர்களுக்கும், போராட்டக் களத்திற்கு வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்கும் உணவளித்த அகத்தியர் சன்மார்க்க சங்கம் ‘ஓங்காரக் குடில்’ முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

### தமிழர் தாயகம் மீட்போம்

தமிழர்களது தாயகம் அல்லது தாய் நாடு என்பது தமிழ்நாடு தவிர இந்தியா அல்ல. தமிழ்நாட்டின் தாயக உரிமை என்பது ஆட்சிபுல கட்டுக்கோப்பு (அதாவது ஆட்சிப் பொறுப்பில் உள்ள நிலம், நீர், கனிம, கரிம வளங்கள் உள்ளிட்டவை) எல்லைகளின் மீராவொண்ணாமை, மக்கள் தொகை இயைபு ஆகியவற்றின் மீதான தமிழர்களது உரிமையை குறிப்பதாகும். இவ்வுரிமை நமது தாயகமாம் தமிழ்நாட்டிற்கு இல்லை. நமது தாயக உரிமையை இந்திய ஏகாதிபத்தியமும், பன்னாட்டு ஏகாதிபத்தியங்களும் பறித்துள்ளன.




பிசானத்தூரில் உயிரி மருத்துவக் கழிவு ஆலையை நிறுவ ஆலை உரிமையாளர் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிக்கையை பொய்யாக தயாரித்துள்ளார் என ஆதாரங்களை காட்டி வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரிடம் பொதுமக்கள் பலமுறை படையெடுத்துத் தெரிவித்தபோதும் ஆலையை வராமல் தடுப்பதற்கான அதிகாரம் தங்களுக்கு இல்லை எனத் தெரிவித்தனர். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கே (SEIAA) அதிகாரம் உண்டு என்றனர். சமூக அக்கறையற்ற படிப்பாளிகள் கூட்டத்தைக் கொண்டதே SEIAA ஆகும். இவர்கள் தான் பிசானத்தூரில் ஆலையை நிறுவலாமா? வேண்டாமா? என்பதை முடிவு செய்ய உள்ளனர். ஆலை நிறுவுவதற்கு, இயங்குவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) இசைவு தராது என துரை வைகோ கூறியதை மக்கள் ஏற்று SEIAA தனது முடிவை அறிவிக்கும் வரை மக்கள் அச்சத்துடனே வாழ்ந்தாக வேண்டும்.

பிசானத்தூர், மக்களின் 50 நாளைய தொடர் காத்திருப்பு போராட்டம் நமக்கு கற்றுத் தருவது, தமிழ்நாடு தனது தாயக உரிமையை இழந்துள்ளது, அதனை மீட்க வேண்டும் என்பதேயாகும்.






**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தமிழ்த் தேச இறையாண்மை அமைப்பும் நேரெதிரான நிலைபாடு கொண்டிருந்தாலும் தோழர் நல்லகண்ணு அவர்களின் எளிமை, நேர்மை, தியாகத்திற்கு அஞ்சலி செலுத்துகிறோம்!**

**வீரவணக்கம் தோழரே!...**

– பாரி(எ) ச. குபேந்திரன், செயலாளர், தமிழ்த் தேச இறையாண்மை(த. தே. இ.).

# தமிழ்நாட்டின் கனிம வளங்கள்: வளர்ச்சியா? பேரழிவா?

**கம்பூர் செல்வராஜ்**

(டங்ஸ்டன் திட்டம் எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு)

தமிழ்நாடு இந்தியாவில் இயற்கைவளங்களில் செழித்து விளங்கும் மாநிலங்களில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. இரும்புத் தாது, பாக்சைட், கிராபைட், கிரானைட், பழுப்பு நிலக்கரி, டங்ஸ்டன், மாலிப்டினம், மீத்தேன் போன்ற பல்வேறு கனிமங்கள் மற்றும் எரிவாயுக்கள் மாநிலத்தின் பல பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. இவ்வளங்களைஆய்வு செய்து பதிவுசெய்யும் பணிகளைஇந்திய புவியல் துறை (Geological Survey of India ) உள்ளிட்ட மத்திய மற்றும் மாநில அமைப்புகள் பல ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றன.

இயற்கைவளங்களைகண்டறிந்து பயன்படுத்துவது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாக கருதப்படுகிறது. ஆனால், அதேநேரத்தில் வளங்களைஅகழ்ந்து எடுக்கும் செயல்முறைகள் சுற்றுச்சூழல் மற்றும் சமூக வாழ்வில் பெரிய தாக்கங்களைஏற்படுத்தும் அபாயமும் கொண்டவை. தமிழ்நாட்டில் சமீப ஆண்டுகளில் எழுந்துள்ள மீத்தேன், டங்ஸ்டன்,கிராபைட் தொடர்பான பல்வேறு மக்கள் போராட்டங்கள், இந்தக் கேள்வியை பெரியளவில் எழுப்புகிறது. கனிம வளங்கள் வளர்ச்சிக்கான பாதையா? அல்லது சுற்றுச்சூழல் மற்றும் சமூக பேரழிவுக்கான வழியா? என்ற கேள்வியைஆழமாக முன்வைக்கின்றன.

தொடர்ச்சியாக நடைபெறும் புவியல் ஆய்வுகள் மூலம் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் கிடைக்கும் கனிமங்களின் பட்டியல் இந்தியன் மினரல்ஸ் இயர்புக் -தமிழ்நாடு ரிவ்யூவில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த பட்டியல்களில் இடம்பெற்ற தகவல்கள் பல இடங்களில் உள்ளூர் மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளன. காரணம், ஆய்வு என்ற பெயரில் தொடங்கும் இந்த நடவடிக்கைகள் பின்னர் சுரங்கத் தோண்டுதல் அல்லது வளச் சுரண்டல் நடவடிக்கைகளாக மாறும் அபாயம் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

சமீபத்திய டங்ஸ்டன், கிராபைட், மீத்தேன்–ஹைட்ரோகார்பன் தொடர்பான திட்ட அறிவிப்புகள் மூலம் இந்த உண்மைகள் வெளிப்படுகின்றன.

தமிழ்நாட்டில் வளச்சுரண்டல் குறித்து பேசும்போது முதலில் குறிப்பிடப்படும் இடம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கம் (Neyveli Lignite Mines) ஆகும். கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தப் பகுதியில் பழுப்பு நிலக்கரி அகழ்வு பல காலமாக நடைபெற்று வருகிறது.

அங்கு செயல்படும் NLC India Limited நிறுவனம் இந்தியாவின் முக்கியமான நிலக்கரி மற்றும் மின்சார உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகும். இதன் பயன்கள் பற்றிய ஒருபுறம் பெரியளவில் பரப்புரைசெய்யப்படுகின்றன.

ஆனால்,இந்த திட்டங்களால் நிலம் இழந்த மக்கள், இடம்பெயர்ந்த கிராமங்கள், நிலத்தடி நீர் பாதிப்பு போன்ற பிரச்சினைகள் எழுந்ததாக பல சமூக இயக்கங்கள் கூறுகின்றன. இதனால், புதிய சுரங்கத் திட்டங்கள் அறிவிக்கப்படும் போதெல்லாம் மக்கள் மத்தியில் அச்சம் உருவாகிறது.

மதுரைமாவட்டத்தில் உள்ள மேலூர் மற்றும் அரிட்டாபட்டி பகுதிகள் புவியியல் ரீதியாக மிகவும் முக்கியமானவை. இங்கு சுமார் 200 கோடி ஆண்டுகள் பழமையான பாறைகள் காணப்படுகின்றன என்று மத்திய புவியியல் துறைகூறியுள்ளது.

யானைமலை, அரிட்டாபட்டி,மாங்குளம், மீனாட்சிபுரம், மேலவளவு உள்ளிட்ட பல மலைப்பகுதிகள் இந்தப் பகுதியில் அமைந்துள்ளன. இந்த இடங்கள் இயற்கைவளங்களின் பார்வையில் மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் மற்றும் உயிரினப் பல்வகைமையின் அடிப்படையிலும் முக்கியமானவை.

இப்பகுதியில் டங்ஸ்டன் கனிமம் இருப்பதாகக் கூறி பல ஆண்டுகளாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. டங்ஸ்டன் என்பது தொழில்துறையில் முக்கியமான உலோகமாக கருதப்படுகிறது. ஆனால்,இதற்கான ஆய்வுகள் சுமார் 200 சதுர கிலோமீட்டர் பரப்பில், பொதுமக்களுக்கு தெரியாமல் ரகசியமாக நடத்தப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் இந்த ஆய்வுகளுக்கு 2018 ம் ஆண்டிலிருந்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். 2024 ஆம் ஆண்டு மத்திய அரசு ஆய்வுகளின் தொடர்ச்சியாக இந்தப் பகுதியில் சுமார் 5000 ஏக்கர் நிலத்தைசுரங்கத் திட்டத்திற்காக ஏலம் விட்டது. இது

குறித்து தகவல் வெளியானதும் மக்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் நிறுவனத்தை எதிர்த்து போராடிய ஒரே காரணத்திற்காக 14 பேரை துப்பாக்கி தோட்டாவால் காவு வாங்கிய வேதாந்த நிறுவனத்துடன் இந்த திட்டம் தொடர்புடையதாகக் கூறப்பட்டதால், எதிர்ப்பு மேலும் தீவிரமடைந்தது.

மதுரை மாவட்டத்தில் நடந்த இந்த போராட்டம் இரண்டு மாதங்களுக்கு மேலாக கிராமம் கிராமமாக தொடர்ந்தது. 2025, ஜனவரி 7 அன்று நடைபெற்ற பெரிய நடைபேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். சமகாலத்தில் நடந்த இந்த போராட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளை ஒருசேர கவனிக்க வைத்த மிக முக்கியமான வாழ்வாதார போராட்டமாக பார்க்கப்படுகிறது.

டங்ஸ்டன் போராட்டம் நடந்து முடிந்த ஒரு ஆண்டுக்குள் மதுரை மாவட்டத்தின் அதே மேலூர் பகுதிக்கு ஒட்டியுள்ள சிவகங்கை மாவட்டப் பகுதியில் சமீபத்தில் மற்றொரு சுரங்கத் திட்டம் தொடர்பாக மக்கள் போராட்டம் எழுந்துள்ளது.

கோமாளிப்பட்டி பகுதியில் 1994 ஆம் ஆண்டு முதல் Tamil Nadu Minerals Limited நிறுவனம் கிராபைட் கனிமத்தைஅகழ்ந்து வருகிறது. உலகத் தரம் வாய்ந்த இந்த கிராபைட் வளம் தொழில்துறைக்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

ஆனால், இந்தத் திட்டத்தைசுமார் 1650 ஏக்கர் பரப்பில் விரிவாக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டதும், அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

2026 ஜனவரி 26 அன்று சுமார் 5000க்கும் மேற்பட்ட மக்கள் சிவகங்கைமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைமுற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் கூறுவதாவது, இந்த திட்டம் விரிவடைந்தால் விவசாய நிலங்கள் அழியும் அபாயம் உள்ளது;

நெல், கடலை, வாழை, காய்கறிகள் போன்ற பயிர்கள் வளரும் முப்போகம் நிலங்கள் பாதிக்கப்படும்' என்று அச்சம் தெரிவிக்கின்றனர். மேலும், கண்மாய்கள் மற்றும் குளங்கள் பாதிக்கப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் குறையும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள பழனி மலைபகுதியில் நடைபெற்ற கனிம வள ஆய்வுகள் இந்தப் பகுதியில் மாலிப்டினம் என்ற கனிமம் இருப்பதை வெளிக்கொண்டு வந்துள்ளது. இந்த கனிமம் எஃகு மற்றும் உயர் தொழில்துறை உற்பத்திகளில் பயன்படும் முக்கிய உலோகம் என கூறப்படுகிறது.

சுமார் 1 லட்சம் ஏக்கர் பரப்பில் மாலிப்டினம் கிடைக்கும் செய்தி திண்டுக்கல் மாவட்ட மக்களிடையேகவலையைஅதிகரித்துள்ளது.

கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையாக உள்ள தமிழ்க்கடவுள் பழனி முருகன் கோயில் இந்த பகுதியில் உள்ளடங்கி வருவதால், மக்களின் வழிப்பாட்டு நம்பிக்கைமற்றும் சுற்றுச்சூழல் குறித்த விவாதமாகவும் இது மாறியுள்ளது.

ஒரு மாழலத்தின் கனிம வளங்கள் தொழில்துறைவளர்ச்சிக்கு முக்கியமானவை. சுரங்கத் தொழில் வேலைவாய்ப்பை உருவாக்குகிறது, அரசுக்கு வருவாய் அளிக்கிறது, தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. அதேநேரத்தில் இந்தத் திட்டங்கள் சுற்றுச்சூழல் சேதத்தை ஏற்படுத்தினால், அதன் நீண்டகால விளைவுகள் மிகப் பெரியதாக இருக்கும்.

மலைகள் வெட்டப்படுதல், காடுகள் அழிவு, நிலத்தடி நீர் குறைவு, விவசாய நிலங்கள் பாதிப்பு, கிராம மக்கள் இடம்பெயர்வு போன்ற பிரச்சினைகள் பல இடங்களில் பதிவாகியுள்ளன.

இதனால், வளர்ச்சி என்ற பெயரில் வளங்களைசுரண்டுவது நியாயமா அல்லது சுற்றுச்சூழலைபாதுகாப்பதா என்ற விவாதம் தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறது. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் எழுந்துள்ள இந்த போராட்டங்கள் ஒரு பொதுவான கேள்வியைமுன்வைக்கின்றன:

**வளர்ச்சி யாருக்காக? வளங்கள் யாருடையது?**

அந்த வளங்களின் பயன் உள்ளூர் மக்களுக்கு கிடைக்கிறதா? அவர்களின் நலன்கள் குறித்து அக்கறைகாட்டப்படுகின்றனவா? என்ற கேள்விகளுக்கு தெளிவான பதில்கள் இல்லாமல் எந்த சுரங்கத் திட்டமும் வெற்றிகரமாக செயல்பட முடியாது.

தமிழ்நாடு கனிம வளங்களில் செழித்து விளங்கும் மாநிலமாக இருந்தாலும், அந்த வளங்களைஎவ்வாறு பயன்படுத்துவது என்பது மிக முக்கியமான கேள்வியாக உள்ளது.

பொருளாதார வளர்ச்சி அவசியம். ஆனால் அது சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மக்களின் வாழ்வாதாரம், வெளிப்படையான நிர்வாகம் ஆகியவற்றுடன் ஒத்துப்போவதாக இருக்க வேண்டும்.

இல்லையெனில், இன்று வளர்ச்சியின் பெயரில் தொடங்கப்படும் திட்டங்கள் நாளைய தலைமுறைக்கு பேரழிவைஏற்படுத்தும் அபாயம் உள்ளது.


✧✧✧✧✧

# தோழர் ஆர். நல்லகண்ணு: நேர்மையின் பிம்பமா? அல்லது திருத்தல்வாதத்தின் மௌன சாட்சியா?

## – ஒரு மார்க்சிய வர்க்க பார்வை

**சாரக்கட்டு**

தமிழக அரசியல் வரலாற்றில் தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களின் வாழ்வு என்பது ஒரு தனிநபரின் வரலாறாக மட்டும் சுருக்காமல், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் எழுச்சி, சரிவு, மற்றும் தத்துவார்த்த மாற்றங்களின் சாட்சியாகப் பார்க்க வேண்டியுள்ளது. 1925-ஆம் ஆண்டு டிசம்பர் 26-ஆம் தேதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) கான்பூரில் தொடங்கப்பட்ட அதே நாளில் பிறந்த தோழர் நல்லகண்ணு, ஒரு நூற்றாண்டு கால அரசியலைத் தனது வாழ்வின் மூலம் பிரதிபலித்தார். அவரை ஒரு 'அரசியல் முனிவர்' என்றும், 'நேர்மையின் பிம்பம்' என்றும் அனைத்துத் தரப்பு அரசியலாளர்களும் போற்றுகின்றனர்.




இருப்பினும், மார்க்சிய-லெனினிய வர்க்கக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், ஒரு தலைவரின் மதிப்பை அவரது தனிப்பட்ட எளிமை மற்றும் ஒழுக்கத்தைக் கொண்டு மட்டும் தீர்மானிக்க முடியாது. மாறாக, அவர் எந்த வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களில் அவரது தத்துவார்த்த நிலைப்பாடு என்னவாக இருந்தது என்பதைக் கொண்டே அவரை மதிப்பிட வேண்டும்.

### (1). தனிநபர் எளிமை vs வர்க்க அரசியல்: ஒரு மார்க்சிய பார்வை

தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களின் எளிமை என்பது தமிழக அரசியலில் ஒரு விதிவிலக்காகப் பார்க்கப்படுகிறது. வாடகை வீட்டில் வசித்தது, பேருந்து மற்றும் ரயில்களில் சாதாரண வகுப்பில் பயணம் செய்தது, தனக்குக் கிடைக்கும் விருதுத் தொகைகளை கட்சிக்கும் பொது நலன்களுக்கும் வழங்கியது என அவரது வாழ்வு ஒரு கம்யூனிஸ்ட்டுக்குரிய தியாக உணர்வைக் கொண்டிருந்தது. தோழர் நல்லகண்ணு அவர்களின் 80-வது பிறந்தநாளில் கட்சி ஊழியர்கள் கட்சி ஆதரவாளர்கள் கட்சி சார்ந்த பல தரப்பினரிடமிருது குவிந்த 1 கோடி ரூபாய் நிதியை அப்படியே கட்சிக்கு கொடுத்ததும், தமிழக அரசு வழங்கிய தகைசால் தமிழர் விருதின் 10 லட்சம் ரூபாயைப் பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்கியதும் அவரது உயர் பண்பைக் காட்டுகின்றன.

ஆனால், மார்க்சிய ஆசான் லெனின் தனது 'அரசு மற்றும் புரட்சி' மற்றும் 'மார்க்சியமும் திருத்தல்வாதமும்' ஆகிய நூல்களில் எச்சரிப்பது போல, முதலாளித்துவ வர்க்கம் புரட்சிகரத் தலைவர்களை அவர்கள் உயிரோடு இருக்கும்போது வேட்டையாடுகிறது; அவர்கள் மறைந்த பிறகு அவர்களை 'தீங்கற்ற சிலைகளாக' மாற்றி, அவர்களின் புரட்சிகரக் கொள்கைகளை மழுங்கடிக்கச் செய்கிறது. நல்லகண்ணு அவர்களின் 'நல்ல மனிதர்' என்ற பிம்பம், அவர் சார்ந்திருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வர்க்க சமரசக் கொள்கைகளை மறைக்கப் பயன்படும் ஒரு கேடயமாக மாறியதா என்பதுதான் இங்கு எழும் முதன்மையான கேள்வி. மார்க்சிய

ஆய்வின்படி, ஒரு தனிமனிதரின் ஒழுக்கம் என்பது அவரது வர்க்க அரசியலின் நீட்சியாக இருக்க வேண்டும். தோழர் நல்லகண்ணு அவர்கள் தனிப்பட்ட முறையில் கறைபடாதவராக இருந்தாலும், அவர் வாழ்நாள் முழுவதும் விசுவாசமாக இருந்த சிபிஐ கட்சி, இந்தியப் பாட்டாளி வர்க்கத்திற்கு இழைத்த வரலாற்றுத் துரோகங்களுக்கு அவர் தார்மீகப் பொறுப்பாவார்.

### (2) 1951 திருப்புமுனை: புரட்சிகரப் பாதையிலிருந்து தேர்தல் பாதைக்கு

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றில் 1951-ஆம் ஆண்டு என்பது ஒரு மாபெரும் தத்துவார்த்தப் பின்னடைவின் தொடக்கமாகும். 1948-ஆம் ஆண்டு கல்கத்தா மாநாட்டில் முன்வைக்கப்பட்ட 'ரணதிவே திட்டம்' ஆயுதமேந்திய புரட்சியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தது. ஆனால், 1951-இல் கட்சியின் தலைமை ஒரு புதிய தந்திரோபாயத் திட்டத்தை முன்வைத்தது. இந்தத் திட்டம், இந்திய சமூக கட்டமைப்பு நிலையை 'அரை நிலப்பிரபுத்துவ, அரை காலனிய' நிலை என்று வரையறுத்தாலும், நடைமுறையில் 'தேர்தல் பாதை' என்ற முதலாளித்துவ ஜனநாயகச் சட்டகத்திற்குள் கட்சியை முடக்கியது.

தோழர் நல்லகண்ணு அவர்கள் 1944-இல் கட்சியில் இணைந்து, 1949-இல் நெல்லை சதி வழக்கில் கைதாகி, கடும் சித்திரவதைகளை அனுபவித்தவர். அத்தகைய வீரஞ்செறிந்த போராட்டப் பின்னணியைக் கொண்ட ஒருவர், கட்சி தனது புரட்சிகரக் குணாம்சத்தை இழந்து, தேர்தல் அரசியலில் மூழ்கத் தொடங்கியபோது அதற்கு எதிராகக் குரல் எழுப்பவில்லை. லெனின் கூறியது போல, திருத்தல்வாதம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் கொள்கைகளை முதலாளித்துவத்திற்கு ஏற்ப மாற்றியமைப்பதாகும். இந்தச் சந்தர்ப்பவாதச் சூழலில், 'கட்சி கட்டுப்பாடு' என்ற பெயரில் மௌனம் காத்தது ஒரு புரட்சியாளரின் தார்மீகக் கடமையல்ல.

### (4) தெலுங்கானா போராட்டமும் தத்துவார்த்தச் சரணாகதியும்

வீரஞ்செறிந்த தெலுங்கானா ஆயுதப் போராட்டம், இந்தியப் புரட்சியின் திசையைத் தீர்மானிக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருந்தது. ஆனால், 1951 அக்டோபரில் சிபிஐ தலைமை இந்தப் போராட்டத்தை ஒருதலைப்பட்சமாகத் திரும்பப் பெறுவதாக அறிவித்தது. அதனைத் தேர்தல் வெற்றிகளுக்காகக் காவு கொடுத்தது கட்சி தலைமை.

நல்லகண்ணு அவர்கள் தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதில் முனைப்பாக இருந்தார். ஆனால், அகில இந்திய அளவில் கட்சித் தலைமை தெலுங்கானா போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தபோது, அதற்கு எதிராக அவர் தனது தத்துவார்த்த பலத்தை நிலைநாட்டவில்லை. தெலுங்கானா போராட்டத்தை ஒடுக்கிய நேரு அரசாங்கத்தை 'முற்போக்கானது' என்று கருதிய சிபிஐ-யின் வலதுசாரித் திருத்தல்வாதப் போக்கு, நல்லகண்ணு போன்ற நேர்மையான ஊழியர்களின் உழைப்பை முதலாளித்துவ ஜனநாயகத்தைப் பலப்படுத்தவே பயன்படுத்தியது.

### (4) 1975 நெருக்கடி நிலை: பாசிசத்திற்கு வழங்கப்பட்ட 'சோசலிச' அங்கீகாரம்

இந்திய ஜனநாயக வரலாற்றின் கருப்புப் பக்கமான 1975 நெருக்கடி நிலையை, சிபிஐ ஆதரித்த நிகழ்வு ஒரு மார்க்சியவாதியின் வாழ்வை மதிப்பிட மிக முக்கியமான உரைகல்லாகும். இந்திரா காந்தி அமல்படுத்திய இந்த அடக்குமுறையை, 'வலதுசாரிப் பிற்போக்குத் தனத்தை முறியடிக்க எடுக்கப்பட்ட சோசலிச நடவடிக்கை' என்று சிபிஐ வர்ணித்தது. இது பாட்டாளி வர்க்கத்தின் முதுகில் குத்திய செயலாகும். இந்தக் கறைபடிந்த வரலாற்றைக் கொண்ட கட்சியில், அதன் முக்கியத் தலைவராக நீடித்திருந்த நல்லகண்ணு அவர்கள், தனது 'நல்ல மனிதர்' பிம்பத்தைத் தக்கவைத்துக் கொண்டாரே தவிர, பாசிசத்தை முறியடிக்கும் புரட்சிகரப் பணியைச் செய்யவில்லை. ஒரு கம்யூனிஸ்ட் அமைதி காப்பது என்பது அநீதிக்குத் துணை போவதே ஆகும்.

### (5) நக்சல்பாரி ஒடுக்குமுறையும் அரசு விசுவாசமும்

1967-இல் திருத்தல்வாதத்திற்கு எதிராக வெடித்த நக்சல்பாரி புரட்சியை 'தீவிரவாதம்' என்று முத்திரை குத்தி, அரசு எந்திரத்தோடு கைகோர்த்து ஒடுக்கியது திருத்தல்வாதக் கம்யூனிஸ்ட் கட்சிகளின்

வரலாறு. கார்ல் மார்க்ஸ் கூறியது போல, அரசு என்பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை ஒடுக்கும் கருவியே. உண்மையான புரட்சியாளர்களை ஒடுக்கும் அரசுக்குத் துணையாக நின்ற ஒரு இயக்கத்தில் நல்லகண்ணு நீடித்திருந்தது, அவரது வர்க்க விசுவாசத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது. புரட்சிகர இளைஞர்கள் வேட்டையாடப்பட்டபோது, சிபிஐ தலைமை அமைதி காத்தது அல்லது அந்த ஒடுக்குமுறையை நியாயப்படுத்தியது.

### (6) தேசிய இனச் சிக்கலும் சர்வதேசத் துரோகமும்

லெனின் வலியுறுத்திய சுயநிர்ணய உரிமை என்பது ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் அடிப்படை உரிமையாகும். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட்கள் இந்திய தேசியம் என்ற போர்வையில் இந்தப் பிரச்சனையை அணுகினர். தமிழகத்தின் மொழிப் போராட்டங்களின் போதும், இலங்கைத் தமிழர் இனப்படுகொலையின் போதும் சிபிஐ-யின் நிலைப்பாடு எப்போதும் இந்திய மையவாதத்தையே சார்ந்து இருந்தது. சர்வதேச அளவில், சோவியத் ஒன்றியத்தின் வழிகாட்டுதலில் வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு, ஏகாதிபத்தியங்களுடன் அமைதியான சகவாழ்வு நடத்தும் திருத்தல்வாதக் கோட்பாடுகளை சிபிஐ ஏற்றுக் கொண்டது.

### (7) சுற்றுசூழல் போராட்டமும் வர்க்கக் கண்ணோட்டமும் தோழர்

நல்லகண்ணு அவர்களின் பிந்தைய கால அரசியல் பெரும்பாலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பைச் சுற்றியே அமைந்தது. 95 வயதிலும் அவர் நீதிமன்றம் சென்று ஆற்று மணல் கொள்ளைக்கு எதிராக வாதிட்டது பாராட்டுக்குரியது. ஆனால், ஒரு மார்க்சியவாதிக்குச் சுற்றுச்சூழல் என்பது வெறும் இயற்கை பாதுகாப்பு அல்ல; அது இயற்கை வளங்களைச் சூறையாடும் மூலதனத்தின் மீதான தாக்குதல் ஆகும். நல்லகண்ணு அவர்கள் இதனை ஒரு குடிமைச் சமூகப் போராளியின் அளவிலேயே நிறுத்திவிட்டார். மணல் கொள்ளையர்களை உருவாக்கும் முதலாளித்துவ அமைப்பையும், அதற்குத் துணை போகும் தனது சொந்தக் கட்சியின் அரசியல் கூட்டாளிகளையும் அவர் விமர்சிக்கவில்லை.

### (8) 1964 பிளவும் 'வலது' திருத்தல்வாதத் தேர்வும்

1964-ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டபோது, நல்லகண்ணு அவர்கள் சிபிஐ (வலது) பிரிவிலேயே நீடித்தார். இடதுசாரிப் பிரிவினர் காங்கிரசுடனான உறவை அறுத்துக் கொண்டு வெளியேறியபோது, நல்லகண்ணு 'ஒற்றுமை' என்ற பெயரில் காங்கிரசுடன் சமரசம் செய்துகொண்ட பிரிவிலேயே இருந்தார். இது அவரது வர்க்க நிலைப்பாட்டைத் தெளிவாக உணர்த்துகிறது. மக்களிடம் செல்வாக்கு இல்லாத ஆனால் அதிகார வர்க்கத்துடன் இணக்கமாக இருக்கும் ஒரு கட்சியில் அவர் இறுதிவரை நீடித்திருந்தது ஒரு தத்துவார்த்த பலவீனமாகும்.

நல்லகண்ணு ஒரு 'நல்ல மனிதராக' மறைந்திருக்கலாம். ஆனால், ஒரு கம்யூனிஸ்ட்டாக அவர் தனது இயக்கத்தின் தத்துவார்த்தச் சரிவுகளையும், வரலாற்றுத் துரோகங்களையும் தட்டிக்கேட்கத் தவறிவிட்டார். அவரது வாழ்விலிருந்து நாம் பெற வேண்டிய பாடம் என்னவென்றால், தனிநபர் ஒழுக்கம் மட்டும் போதாது; ஒரு புரட்சியாளருக்குத் தத்துவார்த்தத் தெளிவும், வர்க்க உணர்வுமே முதன்மையானது. கட்சி தடம் மாறும்போது அதனைச் சுட்டிக்காட்டாத விசுவாசம் பாட்டாளி வர்க்கத்திற்குச் செய்யும் அநீதியாகும்.

தோழர் நல்லகண்ணு அவர்களின் நேர்மை என்பது ஒரு தனிப்பட்ட சொத்து. ஆனால், அவரது அரசியல் என்பது திருத்தல்வாதத்தின் கறைபடிந்த வரலாற்றின் ஒரு பகுதியாகும். தடம் மாறிய திருத்தல்வாதப் பாதையிலிருந்து கம்யூனிசத்தை மீட்டெடுத்து, மார்க்சிய-லெனினிய-மா ஓ சேதுங் சிந்தனை அடிப்படையில் சர்வதேசப் புரட்சிகரக் கண்ணோட்டத்துடன் முன்னகர்வோம்!

புரட்சி ஓங்குக! வர்க்கப் போராட்டம் தொடரும்!

✳✤✳✤✳✤✳

# தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

பாலன் நாச்சிமுத்து

சங்ககாலப் பாண்டியர்களில் நிலந்தருதிருவிற் பாண்டியன் எனும் நெடியோனும் (கி.மு. 6ஆம் நூற்றாண்டு), பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியும் (கி.மு.320-290) தலைசிறந்தவர்கள். அவர்களுக்கு இணையாகப் புகழ்பெற்றவன் இந்த நெடுஞ்செழியன். இவனை 11 புலவர்கள் பாடியுள்ளனர். இவனது வேந்தர் ஆட்சிக் காலம் கி.மு.185-165.

இவன் இரண்டாம் கரிகாலனின் சமகாலத்தவன் (கி.மு.190-170). இவனுக்குப் பிறகு தான் பாண்டியர்கள் வலிமை மிக்கவர்களாக ஆனார்கள். இவன் ஒரு கவிஞனாகவும் இருந்தான். இவன் இவனது புலவர் அவையின் தலைவராக இருந்த மாங்குடி மருதனார் குறித்து புறம் 72ஆம் பாடலில் பாடியுள்ளான்.

அவர் இவன் குறித்து பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக் காஞ்சியைப் பாடியுள்ளார். நக்கீரர் இவன் குறித்து பத்துப்பாட்டில் ஒன்றான நெடுநல்வாடையைப் பாடியுள்ளார். இவன் இளவயதிலேயே தலையாலங் கானத்துப் போரில் சேர சோழர்களையும் ஐம்பெரும் குறுநில மன்னர்களையும் வென்றவன்.

இவன் எதிரிகளின் படைகளை நடுங்க வைக்கும் பேராற்றல் உடையவன். இவனது வெற்றியைக் கண்டு தமிழகமே மதிமயங்கியது என்கிறார் குடபுலவியனார். சங்ககால பாண்டியர்களில் இவனுக்குப்பிறகு இவனளவு புகழ்பெற்றவர்கள் யாரும் இல்லை.

மாங்குடி மருதனார் தனது புறம் 26ஆம் பாடலில் இவனது மறக்களவேள்வி குறித்தும் வேள்வி குறித்துமான செயல்களைப் பாடியுள்ளார். வேள்வி என்பது விரும்பிச்செய்யும் வினை என பாவாணர் கூறுகிறார். இங்கு வேள்வி என்பது விரும்பிச் செய்யும் கொடை ஆகும். வேள்வி என்பது பாடாண் திணையின் 20 துறைகளில் ஒன்று. அதன்படி வெற்றிபெற்ற வேந்தன் உரியவர்களுக்கு ஆநிரைகளைப் பரிசாக வழங்கி அனைவருக்கும் பெருஞ்சோறு வழங்கும் நிகழ்வு.

களவேள்வி என்பது வாகைத்திணையின் களவழி என்ற துறையின் கீழ் வருகிறது. உழவையும் போரையும் ஒப்பிட்டுப் பேசும் துறை இதுவாகும். நெற்களத்தில் உழவன் போரடிப்பதும் அதன்பின் பலருக்கும் நெல்லைக் கொடுத்து மகிழ்வதும் போல் வெற்றிபெற்ற அரசன் போரில் வெற்றிபெற்ற பிறகு, போர்க்களத்திலேயே பேய்களுக்கு உணவு வழங்குவதும் வீரர்களுக்குப் பரிசுகள் வழங்குவதுமான நிகழ்வு.

பிற்காலப் (கி.பி. 9ஆம் நூற்றாண்டு) புறப்பொருள் வெண்பாமாலை மறக்களவேள்வி என்பதை வாகைத் திணையின் ஒரு துறையாகக் கூறுகிறது. இரண்டு வேள்விகளுமே உணவு வழங்குவதும் கொடை வழங்குவதுமான நிகழ்வுகள். இரண்டுமே உணவு வழங்குவதையே முக்கியமாகப் பேசுகின்றன.

மாங்குடி கிழாரின் புறம் 26ஆம் பாடல் மொத்தம் 18 வரிகளைக்கொண்டது. கடலில் ஆழமான இடத்தில் காற்றைக் கிழித்துக்கொண்டு செல்லும் மரக்கலம் போலப் பகைவர் படை நடுவே யானைகள் புகுந்து பிளந்து செல்லும். யானைகள் பிளந்து சென்ற வழியாக வேலை ஏந்திய போர் வீரர்கள் பகைவரைக் கொன்று குவித்து அவர்தம் முரசங்களையும் கைப்பற்றுவர். முதல் ஐந்து வரிகளின் பொருள்.

மேலும் அவ்வீரர்கள் போரின் வெற்றிக்குப்பின் அப்போர்க்களத்திலேயே பகைவர் முடித்தலையை அடுப்பாக்கி, குருதி நீரை உலையில் ஊற்றி, தசை மூளை முதலியவற்றை உலையில் இட்டு, தோளாகிய துடுப்பால் உலையைத் துழாவி சமைக்கப்பட்ட உணவால் களவேள்வி செய்வர். அதாவது போர்க்களத்தில் சமைக்கப்பட்ட அந்த உணவை போர்க்களத்தில் பேய்களுக்குப் படையலாக வழங்கி களவேள்வி செய்வர். இதுபோன்ற பல களவேள்விகளைச் செய்த, கொல்லும் போரை உடைய நெடுஞ்செழியனே! இவை 6 முதல் 11 வரிகளின் பொருள்.

தமிழின் மூலமறையை நன்கு அறிந்த கேள்வியறிவும் ஐம்புலன் அடக்கிய தன்மையும் கொண்ட முதிய அறிவர்கள் சூழ்ந்திருக்க, தோற்ற மன்னர்கள் ஏவல் செய்ய, நிலைபெற்ற வேள்விகளைச்செய்து முடித்த வேந்தனே! உனது பகைவர் எனப் பெயர்பெற்று உன்னை எதிர்த்துப்

போரிட்டுத் தோற்றுப் போனாலும் அவர்களுக்கும் துறக்க உலகம் கிடைக்கும். இவை 12 முதல் 18 வரிகளின் பொருள்.

இங்கு வேள்வி என்பது தமிழ் மூலமறையில் உள்ளபடி வேள்விச் சாலைகளை அமைத்து அனைவருக்கும் பெருஞ்சோறு வழங்குவதும். உரியவர்க்கு ஆநிரைகளை வழங்குவதுமான நிகழ்வாகும்.

**அதியமானும் பெருஞ்சோறும்:**

ஔவையார் தனது புறம் 99ஆம் பாடலில் அதியமான் தனது இறந்து போன முன்னோர்களைப் பேணி, பெருஞ்சோறு வழங்கியதைக் குறிப்பிட்டுள்ளார்.


‘அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்


அரும்பெறன் மரபிற் கரும்புஇவண் தந்தும்’


என தனது பாடலின் தொடக்கத்திலேயே கரும்பைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்த, பெயர்பெற்ற முன்னோர்களின் வழிவந்த அதியமான் தனது இறந்து போன முன்னோர்களைப் பேணி, பெருஞ்சோறு வழங்கி அதனை அனைவரும் உண்ணுமாறு செய்தான் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு ஆவுதி என்பது பெருஞ்சோறு ஆகும். ‘அருத்தல், அருத்தி’ என்பதற்கு உண்ணச் செய்தல் என அகராதிகள் பொருள் கூறுகின்றன. ஆகவே அதியமான் ஆவுதி எனும் பெருஞ்சோறை அனைவரும் உண்ணுமாறு செய்தான் எனலாம்.

மாமூலனார் தனது அகம் 233 ஆம் பாடலில் உதியஞ் சேரலாதன் தனது முதியோரைப் பேணி பெருஞ்சோறு வழங்கியதைக் கூறியுள்ளார். அதேபோன்று தான் பல்யானைச் செல்கெழுமுகுட்டுவனும் தமது முதியோரான குலதெய்வத்தைப்பேணி பெருஞ்சோறு (அடுநெய் ஆவுதி) வழங்கினான் என்பதை மூன்றாம் பதிற்றுப்பத்தின் முதல் பாடல் கூறுகிறது.







உதியஞ்சேரல், செல்கெழுகுட்டுவன், அதியமான் ஆகிய மூவரும் முதியோரைப் பேணி பெருஞ்சோறு வழங்கினர். இவர்கள் மூவரும் வேள்வி செய்யவில்லை. வடமரபு யாகம் செய்யவே இல்லை. இவர்கள் மட்டுமல்ல சங்ககாலத்தில் யாருமே வட மரபு யாகத்தைச் செய்யவில்லை.

முதலாவதாக போரில் வெற்றிபெற்ற வேந்தர்கள் ஆநிரைகளைப் பரிசாக வழங்கியும், பெருஞ்சோறு வழங்கியும் வேள்வி செய்தார்கள். தமிழ் மூலமறையில் உள்ளவாறு, தமிழ் மூலமறையை நன்கறிந்த, கேள்வி ஞானமிக்க முதிய அறிவர்களைக் கொண்டு இவ்வேள்வி செய்யப்பட்டது.

இரண்டாவதாக தமிழ் வேந்தர்கள், அரசர்கள் போன்றோரும் இன்ன பிறரும் இறந்து போன முதியோரை, முன்னோரை, குலதெய்வத்தைப் பேணும் வகையில் பெருஞ்சோறு செய்து அதை அவர்களுக்குப் படையலிட்டு அனைவரும் உண்ணுமாறு வழங்கினர்.

மூன்றாவதாக வெற்றிபெற்ற வேந்தன் போர்க்களத்திலேயே களவேள்வி செய்து பேய்களுக்குப் படையிலிட்டு உணவு வழங்கினான்.

இவை மூன்றும் தமிழர் மரபுகள். இவைகளுக்கும் வடமரபு யாகங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இப்பாடல்கள் பாடப்பட்டு 1000 முதல் 1200 ஆண்டுகள் கழித்து வந்தவர்கள் இவற்றின் உண்மைப்பொருளை அறியாமல், இவற்றை வடமரபு யாகத்தோடு தொடர்புபடுத்திப் பொருள் கூறி வந்துள்ளனர். அதற்கேற்றவாறு பாடல்களில் ஒருசில திருத்தங்களும் இடைச்செருகல்களும் செய்தனர். ஆகவே இப்பாடல்கள் மறுவாசிப்பு செய்யப்படவேண்டும்.

ஆக, வேள்வி, களவேள்வி, முதியோரைப்பேணும் பெருஞ்சோறு (ஆவுதி) ஆகிய மூன்றும் தமிழர் மரபுகள். இத்தமிழர் மரபுகள்தான் சங்ககாலத்தில் இருந்தன. வடமரபு யாகம் என்பது இருக்கவில்லை.

# ‘உண்மை ஒருநாள் வெளியாகும்! பொய்யும் புரட்டும் பலியாகும்’

உலகப் பாட்டாளிகளின் தலைவனே! உன்னத மனிதநேயனே, காரல் மார்க்சே!! எங்கு சென்றீர்?

எங்களை விட்டுவிட்டு?

உங்கள் அருமை உயிர்த் தோழன் ஏங்கல்ஸ்யும் ஏன் அழைத்துச் சென்று விட்டீர்?

நீங்கள் காண விரும்பிய

பொன்னு லகத்தை, இழப்பதற்கு ஏதுமற்ற பாட்டாளி வர்க்கத்தை அணிதிரட்டி,

அயோக்கிய முதலாளித்துவத்தை,

அகராதியிலிருந்து தகர்த்தெரிய,

விஞ்ஞான இயங்கியலை, மார்க்சிய தத்துவத்தை,

உழைக்கும் மக்களுக்களித்து விட்டு, மறைந்தது ஏனோ?

சோசலிச கட்டுமானத்தை, முதன்முதலாக உலகுக்களித்த உண்மையான புரட்சித் தலைவர்கள்,

லெனின் ஸ்டாலின் மாவோ

ஹோசி மின் ஐ யும் அல்லவா அழைத்துச் சென்று விட்டீர்கள்?

ஏக்கத்துடன் காத்திருக்கிறோம்?

எப்போது வருவீர்கள்?

ஏனெனில் எங்களின் குறைதீர்க்க,

வீரத்தின் விளை நிலங்களான தமிழ்நாட்டின் தமிழரான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரையும்,

சீக்கியனாக பஞ்சாப்பில் பிறந்த சிங்ககுட்டியான பகத் சிங்கையும், இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் பறிகொடுத்துவிட்டு,

பராரியாக

பாசிச பயங்கரவாத பெருச்சா லிகளின் ஆட்சியில்

சிக்கித் தவிக்கிறமோ,

எங்கள் நிலைக் கண்டு,

ஏன் இன்னும் வரவில்லை?

எங்களுக்கேன் விடிவில்லை?

ஏக்கத்துடன் காத்திருக்கிறோம்?

எப்போது வருவீர்கள்?

ஏனெனில் எங்கள் குறைத் தீர்க்க

ஏற்றமிகுத் தலைவன் இங்கில்லை?

என்னிப்பார்க்கும்போது, எண்ணிலடங்காத் தவறுகள் இழைத்துவிட்டோமேன்று, உணரும்போது,

எண்ணிக்கையிலடங்காத போலிகள்

காளாண்கள் போல் முளைத்திருந்தன!

சாதி ஆணவப்படுகொலையை, தீண்டாமையை,

இந்துத்துவ மதவெறிப் பார்ப்பனீய பயங்கரவாதிகளை,

கார்பொரேட் ஏகாதிப்பத்திய கழுகுகளை எதிர்த்து,

அட்டைக்கத்தி வீரர்கள் தான்,

உண்ணாவிரதம், அகிம்சை,

அரை நிர்வாண, காத்திருப்பு போரை,

கூட்டணி அரசுடன் நடத்துகிறார்கள்!

போலி மார்க்சியம் பேசும் புல்லுருவிகள்

மாமேதையை அடகு வைக்கிறார்கள் சிலைவடிவில்!

சிங்காரச் சென்னையில், சீர்மிகு கன்னிமரா நூலகத்தில்,

சிந்தனையாளர்

காரல் மார்க்சை சிலையாய் நிர்மாணிக்க,

சீற்றத்துடன் சிலை அமைப்புக்குழுத் தோழர்கள், சிட்டெனப் பறந்து ப் பறந்து,

ஆதரவு தேடித்

தேடி, அனைத்துக்கட்சித் தலைவர்களை

அடிக்கடிச் சந்தித்து,

சால்வை அணிவித்து, ஆளும் அரசை நிர்பந்திக்க,

வரப்பிரசாதமாய் தேர்தல் நெருங்க,

அடித்தது ஜாக்பாட் பரிசு,

அரசுக்கும், போலிகளுக்கும் மார்க்ஸ் சிலை வடிவில்?

மார்க்ஸ் சிலையை பெற்றெடுத்ததோ,

மார்க்ஸ் தலைமையிலான, சிலையமைப்புக்குழு!

ஆனால் தட்டிப் பறித்ததோ, போலிகளின் குழு!!

சிலையமைப்பு விடயத்திலே,

பொய்யும், புரட்டும், பித்தலாட்டமும், பெருந்தன்மையும் இல்லையென்றால்,

திரிபுராவிலும், மேற்கு வங்கத்திலும்

இன்னும் எத்தனை, எத்தனையோ?


இவண்,

தமிழ்த் தேச இறையாண்மை

தோழன்

**ப. தமிழ் நேயன்.**

# அறிவொளி - உழைக்கும் வர்க்கத்தின் நீண்ட மூச்சு




ஃபாசிச இரவு  நீண்டது.
கதவுகள் காரணமின்றி தட்டப்பட்டன.
புத்தகங்கள் குற்றவாளிகளாக இழுத்துச் செல்லப்பட்டன.
சொற்கள் கூட கண்காணிக்கப்பட்டன.
மௌனம் தான் பாதுகாப்பு
என்று நகரம் கற்றுக்கொண்ட காலம்.
அந்த அமைதியின் அடியில் மட்டும்
ஒரு ஒலி தொடர்ந்து இருந்தது
அச்சின் சுழற்சி.
மெதுவானது.
ஆனால் தடுக்க முடியாதது.
மண்ணுக்குள் ஓடும் நீரோட்டம் போல.
அங்கே
ஒரு மனிதர் உழைத்தார்.
புகழ் தேடாமல்.
மேடை ஏறாமல்.
பெயரை முன்வைக்காமல்.

உழைக்கும் வர்க்கத்தின்
ஒரு சாதாரண கை.
அவரது மேசையில்
காகிதம் கிடையாது
வாழ்க்கைகள் கிடந்தன.
கூலி தொழிலாளியின் வியர்வை,
விவசாயியின் பிளந்த கை,
காடுகளின் சுரண்டல்,
சிறைகளின் சுவாசம்
அனைத்தும்
சொற்களாக மாறின.
அந்த சொற்கள்
நூல்களாகத் தைக்கப்பட்டன.
புரட்சிக்காக
எழுத்துகள் கோர்க்கப்பட்டன.
பொட்டலம் கட்ட முடியாத
ஒரு உள் வெப்பம் அவரிடம் இருந்தது.

அது கோபமல்ல.
அது கடமை.
அணையாமல் காக்கப்பட்ட
மக்களின் சிந்தனை.
வழக்குகள் குவிந்தன.
காவல் நிலையங்கள் திறந்தன.
சிறைச்சுவர் நீண்ட நிழல் போட்டது.
அவர் முகத்தில்
சிறு புன்னகை மட்டும்.
பயம் இல்லாததால் அல்ல
வேலை தொடர வேண்டும்
என்று தெரிந்த அமைதி.
ஆழ்கடலில்
அலை பிறக்கிறது
யாரும் பார்க்காமல்.
பிறகு அது கரையை மாற்றுகிறது.
அப்படித்தான்
அவரது செயல்.
கத்தல் இல்லை.
ஆர்ப்பாட்டம் இல்லை.
ஆனால்
தலைமுறைகளை அசைக்கும் பொறுமை.
மார்க்ஸ் எழுதிய கனவுகள்,
லெனின் நடைபாதைகள்,
மாவோவின் அனுபவங்கள்
அவை எல்லாம்
புதிய கைகளில் சேர்ந்தன
அந்த உழைப்பின் வழியே.
அவர்
பாலம் மாதிரி இருந்தார்.
பாலம் தன்னைப் பற்றி பேசாது.
மக்களை மட்டும் கடத்தும்.
வெற்றிலை சிவக்கும் அறம் போல
எளிமையான வாழ்வு.
நேர்மை.
பகிர்வு.
நான் என்பதைக் குறைத்து
நாம் என்பதைக் பெருக்கிய மனசு.
ஒரு நாள்
அவர் நின்றார்.
ஆனால்
அச்சு நின்றதா?
நூல்கள் நின்றதா?
கேள்விகள் நின்றதா?
இல்லை.
இப்போது
ஒவ்வொரு திறக்கும் புத்தகத்திலும்
அவரது உழைப்பு இருக்கிறது.
ஒவ்வொரு விழிக்கும் மனதிலும்
அவரது தடம் இருக்கிறது.
அவர்
ஒரு தனி உருவம் அல்ல.
ஒரு வரலாற்றுத் தேவை.
ஒரு வர்க்கத்தின் கடமை.
இடைவிடாத முயற்சியின் வடிவம்.
கடல் வற்றாது.
நீரோட்டம் நிற்காது.
உழைக்கும் மக்கள் மறையாது.
அவர்கள் இருக்கும் வரை
அவரது பணி தொடரும்.
அமைதியாக.
ஆழமாக.
நீண்ட மூச்சாக.
அறிவொளி
உழைக்கும் வர்க்கத்தின்
அணையாத நினைவுச் சுவாசம்.

✧✧✧✧✧✧